செடி கொடிச் சித்தர்

லூதர் பர்பாங்க்

3187

3187

கழக வெளியீடு—களஎகூ.

செடி கொடிச் சித்தர்
லூதர் பர்பாங்க்

காழி. சிவ. கண்ணுசாமிப் பிள்ளை
எழுதியது.

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்
திருநெல்வேலி & சென்னை
யுவ-கார்த்திகை

[*Copyright*]

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA
WORKS PUBLISHING SOCIETY,
TINNEVELLY, LTD.,
TINNEVELLY & MADRAS
DEC. 1935

THE PROGRESSIVE PRINTERS, MADRAS.

Y. M. C. ASSOCIATION PAGANERI. பாகனேரி

முகவுரை

"எழிலுடை யொருபொருள் என்றும்இன் பளிக்கும்"

(A thing of beauty is a joy for ever.)

என்று பாடினர் ஜான் கீட்ஸ் (John Keats) என்னும் ஆங்கிலப் புலவர். என்றுமே யன்றி, எங்கும் எவர்க்கும் அழகு இன்பத்தை யளிக்கும் என்பது எளிதிலுய்த்துணரப்படும். இனி, எழிலுறு பொருள் ஒன்றைக் காண்டலே சிறப்புடைத் தெனின் எழிலுற ஒரு பொருளைச் செய்தல் எத்துணைச் சிறந்தது! கண்டு மகிழ்வதிலும் செய்து மகிழ்வதே சீரியதொன்றும்.

தங்களை அழகு செய்துகொள்ள மக்கள் இயற்கையின் உதவியை நாடுவதியல்பு. அத்தகைய இயற்கைக்கே அழகு செய்ய ஒரு மகன் முற்படுவானாயின் அவனை வியந்து பாராட்டாமலுமிருக்க முடியுமோ? இயற்கை யென்றாலே அழகென்று பொருள் கொள்வோருமுளர். ஆகவே, இயற்கை யென்னும் அழகுக்கே அழகு செய்ய முற்பட்ட ஓர் அறிவிய லறிஞரின் வரலாற்றை ஒருசிறிதேனும் அறிதல் இன்பம் அளிக்குமன்றே?

எளிய வாழ்வும் உயரிய நோக்கமுங் கொண்டுழைத்து, அரியன செய்து பெரும்புகழ் பெற்ற பெரியார் பலருள், அமெரிக்காவிற் பிறந்த லூதர் பர்பாங்க் என்ற "செடி கோடிச் சித்தர்" மிகவுந் தலைசிறந்து விளங்குபவராவர். துணுக்கென நெஞ்சந் துடித்திடச் செய்யும் நிகழ்ச்சிகள் ஒன்றையும் அவர்

வாழ்க்கையில் காணமுடியாது. எளிய குடும்பத்திற் பிறந்து எளிய வாழ்க்கை வாழ்ந்துவந்தவர்; எனினும் எவரும் இறங்காத துறையிலிறங்கிச் செய்யாத செயல்களை வியக்கத்தக்கவாறு செய்து முடித்தவர் அப்பெரியார்.

இளமையிலேயே வாழ்க்கையின் குறிக்கோளைத் தேர்ந்து கொண்டு, அதனை எய்துவதே இலக்காய்த் தம் கருத்தையும் செயலையும் ஒருங்கே ஆற்றுப்படுத்தி விடா முயற்சியுடனும், தளரா ஊக்கத்துடனும் உழைத்து வெற்றி பெற்ற அச் சான்றோரின் வாழ்க்கை வரலாறு சிறந்த பல படிப்பினைகளை நல்குமென்பது திண்ணம். அது குறித்தே இச்சிறுநூல் எழுந்ததாகும்.

காழி. சிவ. கண்ணுசாமி.

பொருளடக்கம்

		பக்கம்
௧.	முன்னுரை	௧
௨.	பர்பாங்கின் இளமைக் காலம்	௫
௩.	பர்பாங்க் காலிஃபோர்னியா சென்றடைதல்	௧௭
௪.	பர்பாங்கின் முறைகளும், ஆராய்ச்சிப் பயன்களும்	௩௰
௫.	நாள்முழுதும் ஓயாவேலை	௩௫
௬.	பர்பாங்கின் பண்பு நலங்கள்	௪௯
௭.	பின்னுரை	௫௫
	நினைவுவிழாக் கொண்டாட்டம்	௬௰
	ஈடித் டாலீ எழுதிய பாட்டு	௬௧
	தோமாஸ ஆல்வா எடிசன் எழுதிய கடிதம் (ஆங்கிலத்தில்)	௬௨
	மேற்படிகடித மொழிபெயர்ப்பு	௬௩
	ஹாரி எல்மர் பார்ன்ஸ், டேவிட் ஸ்டார் ஜார்டன் இவர்கள் கடிதங்கள்	௬௪
	ஜோஸெஃப் லூயி படித்த நினைவு-விழா அறிக்கை	௬௫

விளக்கப்படங்கள்

லூதர் பர்பாங்க் உருவப்படம் .... க
சாந்த ரோஸாவிலுள்ள பர்பாங்கின் வீடு .... உஉ
ஸெபாஸ்டபோல் ஆய்வுப்புலம் .... உஎ
இயற்கை நாகதாளியும், முள்ளற்ற
பர்பாங்க் நாகதாளியும் .... ௱க
ஜோஸெப் லூயி நினைவுவிழா அறிக்கை படித்தல்.... சுரு
பர்பாங்க் தாம் வளர்த்த மரத்தடியில் அடக்கஞ்
செய்யப்பட்டது .... எ௰

லூதர் பர்பாங்க் பக்கம் க

லூதர் பர்பாங்க்*

க. முன்னுரை

உலகத்திலே மக்களாய்ப் பிறந்தவர்களுள் "எண்சாணுடம்பில் தலையே தலைமைத்து" என்ற ஒரு கருத்துப் பரவி யிருத்தலைக் கண்டிருக்கலாம். நாகரிக மிகுந்த இக்காலத்தே கைத்தொழில்கள் பரந்து பல்வகையாக வளர்ச்சியுற்றிருப்பதை உற்று நோக்குவோர், எண்சாணளவிற்றாய உடம்பில் ஒருசாணளவிற்றாய வயிறே தலைமைத்து என்று எண்ணுதல் கூடும். என்னை? இத்துணைக் கைத்தொழில்களும் வயிறு வளர்ப்பது கருதியே எழுந்தனவாகலின். பொதுப்படக் கூறின், உலகில் உயிர் தங்கி நிற்பது வயிறு நிறைதலினாலன்றோ? வயிறின்றேல் உயிரின்று, உயிரின்றேல் தொழிலின்று. வயிற்றுக்குப் போதிய உணவு கிடையாமையா னன்றோ,

† " அடகெடுவாய் பலதொழிலு மிருக்கக் கல்வி
அதிகமென்றே கற்றுவிட்டோ மறிவில் லாமல்
திடமுளமோ கனமாடக் கழைக்கூத் தாடச்
செப்பிடுவித் தைகளாடத் தெரிந்தோ மில்லை
....
'சனியான' தமிழைக்" கற்றுக்
கல்லடிக்கு முளியிரண்டு காதடிக்கு
ளடிப்பதெனக் கவிதை கேட்டுப்

---

* Luther Burbank. † படிக்காசுப் புலவர்.

பல்லடிக்கே கிடுகிடெனப் பறையடிக்கும்
நெஞ்சர்தமைப் பாடி னேமே"

அந்தோ! என்ன சென்ம மெடுத்துலகி லிரக்கின்றோம்!" என்று தமிழ்ச்சேயாகிய ஒரு மாபெரும் புலவர் தம் தாய்மொழியாகிய தமிழையுங் கடிந்து பாடுவாராஞர்!

இனி, 'அத்தகைய வயிற்றுப்பான்மை மலிந்து காணப்படும் நாகரிக உலகத்தில், வயிற்றைப் பொருட்படுத்தாது தலையை, அஃதாவது, மூளையைப் பொருட்படுத்தித் தொழிலாற்ற முன்வருதல் போற்றற்குரியதன்றோ? எத்தொழிலைப் பின்பற்றினுலும் அதன்கண் மூளையைச் செலுத்தி மெய்வருந்தி உழைத்தால் உழைப்பாளிக்கும் தொழிலுக்கும் பெரும்பயனும் பெரும்புகழும் ஒருங்கே விளையும் என்பது திண்ணம். எனவே, எத்தொழிலைத் தொட்டாலும் அதன்மீது உண்மைப்பற்று வைத்து, அதனைச் செய்யுந் திறனறிந்து செவ்வையாய்ச் செய்து வந்தால் அது கோரிய பயனை யளிக்காமற் போகாது என்ற உண்மை எளிதிற் புலனுகும்.

இப் பேருண்மைக்கு எடுத்துக்காட்டாக அண்மையில் இலகியிருந்தவர் லூதர் பர்பாங்க் என்பார். அவர் மேற்கொண்ட தொழில் தோட்டப்பயிர் செய்து செடி கொடி மரங்கள் முதலியவற்றை ஆராய்ச்சி முறைப்படி வளர்த்து வருவதாகும். அத்துறையில் அவருக்கு முன்னும், அவருக்குப் பின்னர் இதுகாறும் அவரை யொத்துத் தனித்தலைமை பூண்டு விளங்கியவர் வேறெவருமில்லை

என்றே கட்டுரைத்துக் கூறலாம். இரண்டாயிரத்தைஞ் ஞூறுக்கு மேற்பட்ட பல்வேறு மரஞ் செடி கொடி இனங்களை அவர் வளர்த்துக் காத்து ஆராய்ச்சி செய்துள் ளார். இஃதன்றி இயற்கையிற் காணப்படாத செடி கொடி இனங்களை அவர் தாமே புதிதாகத் தம் அறிவாற்ற லின் துணைகொண்டு படைத்துமுள்ளார். செடி கொடித் துறையில் அவருக்கிருந்த செல்வாக்கு நிகரற்றதாகும்.

அவர் புதிதாய்ப் படைத்தனவாகக் கூறப்பட்ட செடி கொடி இனங்களைப் பயன்படு மினங்கள், கவின்றரு மினங்கள் என்று இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். மக்க ளுக்கும் மாக்களுக்கும் உணவுப் பொருளாக உதவி அவ் வழி நாட்டின் வருவாயையும் பெருக்குமாறு இயற்றப் பட்ட கொட்டைவகைகள், பழவகைகள், காய் கறி வகைகள் ஆகிய இவை முதற் பிரிவாகிய பயன்படு மினங் கள் என்றதன்பாற் படுவன ; மற்றும், கண்ணைக் கவரும் வகையில் அழகும் உருவும் சிறந்து அதனால் உலகத் தோற்றத்தையே எழில் மிகுமாறு செய்விப்பான் இயற் றப்பட்ட மலர்வகைகள் இரண்டாம் பிரிவாகிய கவின் றரு மினங்கள் என்றதன்பாற் படுவனவாம்.

இனி, லூதர் பர்பாங்க் உயர்தரக் கல்வியேதும் பயின்றவரல்லர் ; ஓரளவிற்கு முறையாகத் தொடக்கக் கல்வியே பயின்றவர். எனினும் அவர் தாங்கற்ற அச்சிறு கல்வியைக் கொண்டு தம் அறிவைப் பலதுறை களிலும் வெளியிடப்படும் நூல்களைப் படித்துப் பெருகச் செய்தவர். இத்தகையோரான பர்பாங்க் தம் வாழ்க்

கைத் தொடக்கத்தில் பட்ட அல்லல்களோ எழுதி முடியா, எட்டிலடங்கா. அவர் வயிற்றுக்குப் போதிய அளவிற்கு உணவு இல்லாமலும், அப் போதாஉணவும் வேளைதோறும் கிட்டாமலும் பட்டினி கிடந்து தத்தளித்து உடல்நலமிழந்திருந்தது பல நாள். அஃதொரு புறமிருக்கத் தாம் மேற்கொண்ட முயற்சியின் விளைவை ஊகித்தறிய முடியாத பல அறிஞர்களின் இழிப்புரையினாலும் பழிப்புரையினாலும் உளநலமுங்கெட்டு உயிர் வெதும்பியது பலநாள். "உழைப்பின் வாரா உறுதிகளுளவோ!", "உண்மையே வெல்லும்; ஒழுக்கமே உயர்வளிக்கும்," என்பன போன்ற நன்னம்பிக்கைகளே உறுதுணைகளாக ஒருமைப்பாட்டுடன் உழைத்து எதிர்த்து நின்று போராடி, இயம்பொணு இடர்கள் மிகுந்த இவ் வாழ்க்கையி னிடையில், வெற்றிகண்டார் லூதர் பர்பாங்க். பிறர் துணிந்திறங்காத புதிய துறையிற் புகுந்து அருஞ்செய லாற்றியதால், அவரைப் பொறுத்தவரையில் மட்டற்ற பொருளை அவர் திரட்டியிருக்கக்கூடும். ஆனாலும், அவ்வாறு செய்யாமல், ஈட்டிய பொருளை யெல்லாம் இறங்கிய துறையிலேயே செலவிட்டு, தம் உடல்நலங் கருதித் தனிப்பட்ட வசதிகள் ஏதுந் தேடிக் கொள்ளாமல், மிகவும் எளிமையான வாழ்க்கையையே நடத்தி, உலகின்புறக்கண்டு களித்த அருந்திறற் பெரியார் பர்பாங்க் ஒருவர் தாமென்று துணிந்து கூறலாம்.

௨. பர்பாங்கின் இளமைக் காலம்

ஐம்பெரு நிலப்பகுதிகளில் அமெரிக்கா என்னும் பகுதியிலுள்ள மஸ்ஸாச்சூஸெட்ஸ்* என்னும் பிரிவைச் சேர்ந்த லன்காஸ்டர்† என்னும் நகரத்தில், 1849-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் ஏழாம் நாள் லூதர் பர்பாங் பிறந்தார். அவருடைய தந்தையார் ஆங்கிலேயரினத்தைச் சேர்ந்த ஓர் அறிவாளி; அவரிடமிருந்து பர்பாங்க் நூல்களைக் கற்பதில் அளவற்ற பெருவிருப்பைப் பெற்றார். அவர்தம் தாயாரோ ஸ்காட்ச்‡ இனத்தைச் சேர்ந்தவர்; எப்பொருளும் அழகாகவும் கவர்ச்சி பொருந்தியும் விளங்குதல் வேண்டுமென்ற கொள்கையை பர்பாங்க் தம் தாயாரிடமிருந்தே பெற்றார். எனவே, பர்பாங்க் தம் பிற்கால வாழ்வில் அகன்ற நோக்கமும் நுண்மாண் நுழை புலனுமுடையவராய் விளங்கினரெனின், அந்நற் பண்புகள் தம் தந்தை தாயரிட மிருந்து பெற்றவையே யாம்.

"விளையும் பயிர் முளையிலே," என்பது காலங்கண்ட மூதுரை. அதுபோல, இளங்குழவியா யிருந்த பொழுது-முதலே பர்பாங்க் மலர், செடி, கொடிகளைக் கண்டால் தாவுவார்; கைதட்டி ஆர்ப்பரிப்பார்; கங்கு கரையற்ற களிப்பெய்துவார். தொட்டிற் குழந்தையா யிருந்த காலத்தில், அவர் கைகளில் மலர்களைக் கொடுத்தால், ஆர்வத்துடன் அவற்றை யேற்றுச் சிதைவுறாமலும் நலங் குறையாமலும் கைகளிற் பற்றியபடியே கீழே விடாமல்

---

* Massachusetts. † Lancaster. ‡ Scotch.

வைத்திருப்பார்; அம்மலர்கள் தாமாக வாடி வதங்கி நிறங்குலைந்த பின்னரே அவற்றைக் கைநெகிழ விடுவார். சிற்சில சமயங்களில் அவர் ஓயாமல் அழுவதுண்டு. அக் காலங்களில் அவர்தம் தாயார் அவருக்கு ஏதாவது ஓர் அழகிய மலரைப் பறித்துக் கையிற்கொடுத்து விட்டால், உடனே அழுகை ஓய்ந்து அகமகிழ் வெய்துவார்.

ஒருமுறை அவருடைய உடன்பிறந்தாள் ஒரு மல ரைப் பறித்து அவர் கையிற் கொடுத்தாள். வழக்கம் போல் அவர் தம் சிறுகைகளால் அம்மலரை இறுகப்பற்றி அதன் அழகைப் பார்த்து மகிழ்ந்திருந்த பொழுது, அம் மலரிலிருந்து ஓரிதழ் உதிர்ந்து விட்டது. உதிர்ந்த இதழை எடுத்து விழுந்த இடத்தில் முன்போல ஒட்ட வைக்க அவர் பன்முறை முயன்றார்; முயற்சி நிறை வேறாமற் போகவே நெடுநேரம் அழுதார்.

குழவிப் பருவந் தாண்டிக் குறுநடைப் பருவ முற்ற காலத்திலே, குழந்தைகள் பாவைகளையோ, நாய், பூனை முதலிய சிறு விலங்குகளையோ தேடி விளையாடுவது வழக் கம். ஆனால் பர்பாங்கோ மலர்க்கொத்துக்களையும், பூஞ் செடி வைத்துப் பயிர்செய்த தொட்டிகளையுமே தேடி விளையாடுவார். ஒருநாள் நாகதாளி* இனத்தைச் சேர்ந்த ஒரு செடி நட்டு வைக்கப்பட்டிருந்த தொட்டியொன்றை அவர் தங்கையில் வைத்துக்கொண்டு இங்கு மங்கு மோடி விளையாடிக் கொண்டிருந்தார்; விளையாடிக்கொண்டிருந்த வர் கால்இடறிக் கீழேவிழுந்தார். கையிலிருந்த தொட்டி

* Cactus.

யும் கீழே விழுந்துடைந்து செடியும் முறிந்து விட்டது. அன்று அவர் கொண்ட வருத்தத்தை இவ்வளவென்று கூற முடியாது. "அவர் அழுது வடித்த கண்ணீர் ஆறுய்ப் பெருகிற்று" என்று கூறலாம்.

இளமைக்காலத்தில் அவர் விரும்பி விளையாடிவந்த செடிகளில் நாகதாளியே முதன்மையானதாம். அவ்வாறு விளையாட்டுத் துணையாயிருந்த அந்நாகதாளியினத்தின் மீது பிற்காலத்தில் பர்பாங்க் தம் கருத்தைச் செலுத்தியதும், அரிதின் முயன்று அவற்றை முள்ளற்றனவாகவும் வளம் படைத்தனவாகவும், சுவை மிகுந்தனவாகவும் செய்துமுடித்ததும் வியப்பையளியாவோ! அவர் செய்த இம்முயற்சியினால் காடுகரம்பாயிருந்த நிலங்களிலெல்லாம் மக்களுக்கும் மாக்களுக்கும் ஒருங்கே பயன் பட்டு நாட்டுப் பொருள்நிலையை மிகுத்தற் குரியதாயிருந்த இம்முள்ளற்ற நாகதாளியே பயிர் செய்யப்பட்டு வருவதாயிற்று. மக்கட் பகையாகவும் பாம்பி னுறவாகவும் கருதப்பட்டு வந்த முள்ளே உருவாயமைந்த ஒரு செடி, மக்களுக்கும் மாக்களுக்கும் நண்பனாக மாறியது பர்பாங்கின் அறிவாற்றலுழைப்பின் பயனேயாகும்.

வயது வளர வளர, உலகிற் காணப்படும் அழகுள்ள பொருள்கள் எல்லாவற்றிலும் பர்பாங்கின் ஆர்வமும் உடன்வளர்வதாயிற்று. அவர் வீட்டின் பின்புறத்திலிருந்து கூப்பிடு தொலையில் மரஞ் செடிகள் நிறைந்த பல குன்றுகள் இருந்தன. அக் குன்றுகளிடையே நாடோறும் சமயம் வாய்ப்புழியெல்லாம் சென்று அவர்

தம்பொழுதைக் கழித்து வருவார். இதுவே அவருக்குத் தம் வயதிற்கேற்ற விளையாட்டாகத் தோன்றிற்று. அக் குன்றுகளில் எவ்வெப் பகுதியில் பலநிறமுள்ள காட்டு மலர்கள் காணப்படும் என்பதும், அவை எவ்வெப்பொழுது அரும்பி மலரும் என்பதும் அவருக்குக் குருட்டுப் பாடம். பனி மூடுவதால் செடி கொடிகள் பூவாமல் இருக்கும் பனிக்கால மொழிந்த மற்றைக் காலங்களில் பர்பாங்க் அக் குன்றுகளிலேயே பெரும் பொழுதைக் கழித்து வந்தார். வரவர, தாம் பழகிவந்த செடி கொடி யினங்களில் ஒன்ருகவே அவர் தாமும் மாறி விட்டாரென்றுகூடச் சொல்லலாம். அவை மொழியாடுவவென்பது உண்மையாஞல், அம் மொழியை அவர் முற்றப் பயின்று, அவற்றின் பிறப்பு வளர்ப்புக்களைத் தெரிந்து, அவற்றில் அடங்கியுள்ள நுண்மைகளை உணர்ந்து அவற்றின் மாசுமறுவற்ற கவினுறு வாழ்க்கையில் ஈடுபடுந் தன்மையும் தகுதியும் வாய்ந்தவராவார்.

பின்னர், பள்ளிக்குச் சென்று கல்விபயிலும் பருவம் அவருக்கு வந்துற்றது. வீட்டின் அருகாமையிலிருந்த **ரெட் ஸ்கூல் ஹவுஸ்*** என்ற சிறு பள்ளிக்கூடத்துக்கு அவர் அனுப்பப்பட்டார். பள்ளிக்கூடத்தில் எதையும் விரும்பி ஆர்வத்துடன் கற்று வந்தார் பர்பாங்க்; மரஞ் செடி கொடி முதலியவற்றைப் பற்றி மேலும் மேலும் கேள்விகள் கேட்டுப் பல உண்மைகளை அறிந்து வந்தார். இவற்றைக் கண்ட ஆசிரியர்களும் மற்றையோரும், அவ

---

* Red School House.

ரைப் பெரிதும் புகழ்ந்து பாராட்டி வந்தனர். இயற்கைத் தோற்றத்திலும் அதன் பேரழகிலும் ஈடுபட்டது தம் முள்ளம் என்பதை பர்பாங்க் தம் இளமையிலேயே யாவருமுணரத் தக்க வகையில் பல வழியாக வெளிக் காட்டி வந்தார். நல்ல வயதுவந்த பிறகும் ஒருநாள் அவர் பல அறிஞர்களுடன் ஒரு பொருளைக் குறித்து ஆராய்ச்சி முறையில் வழக்காடி வருகையில், திடுமெனப் பேச்சை நிறுத்தி ஒரு வானம்பாடி உயரத்தில் பாடுவதைக் கேட்டுக் கொண்டிருந்தா ரென்றால், இயற்கைப் போக்கில் அவர் மனம் ஈடுபட்டிருந்ததற்கு வேறு சான்றும் வேண்டுமோ?

பள்ளியிற் சேர்ந்து, பன்னிரண்டாவது வயது முடிவதற்குள், அறிவியற்றுறையில் அதன் ஒவ்வொரு பிரிவையும் பற்றிப் பொதுப்படையாக என்னென்ன அறிய வேண்டுமோ அவை யாவற்றையும் அறிந்து கொண்டார் பர்பாங்க். தாம் படித்த ஒரு கதையின் சுருக்கத்தைக் கூறச் சொன்னால் அவருக்குக் கூறமுடியாமலிருக்கலாம்; படித்த நாடகத்தின் சிறந்த பகுதி என்னவென்று கேட்டால் எடுத்துரைக்க முடியாமலிருக்கலாம்; ஆனால் அறிவியற் றுறையிற் புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்ட உண்மைகளைப்பற்றி வினவினால் அவர் ஒன்றும் விடாமல் விளக்கிக் கூறிவிடுவார். ஏனைய சிறுர்களுடன் கலந்து அவர் எல்லா விளையாட்டுக்களையும் விளையாடி வந்தாரானாலும், படிப்பில் அவருக்கு இருந்த ஆர்வம் விளையாட்டில் எப்பொழுதும் இருந்ததில்லை.

அச் சிறுபள்ளிக்கூடப் படிப்பு முடிந்தவுடன், அவ் வூரிலிருந்த கல்விக் கழகமொன்றிற் சேர்ந்து பர்பாங்க் பயின்று வந்தார். அக் கழகம் மாரிக் காலங்கள்தோறுந் தான் கூடும். அப்பொழுதெல்லாம் பர்பாங்க் அங்குச் சென்று கல்வி பயின்று வருவார். மற்றக் காலங்களில் அவ்வூரிலிருந்த ஒரு பெரிய நூல்நிலைய*த்திற்குச் சென்று பல நூல்களை அவர் படித்து வருவார். தந்தையார் வைத்திருந்த பொறுக்கான சில நூல்களையும் பன்முறை படித்து வந்தார்.

மாரிக்கால மொழிந்த மற்றக் காலங்களில் மஸ்ஸாச் சூஸெட்ஸைச் சேர்ந்த ஓர்ஸ்டர்† நகரத்திலிருந்த ஒரு பெரிய தொழிற்சாலையில் பர்பாங்க் வேலை பார்த்து வந்தார். அவ் வேலைக்கு அவர் பெற்ற ஊதியமோ மிகவுங் குறைந்தது. ஆனால் அவர் செய்ய வேண்டிய தாக விருந்த வேலையோ அளவற்றதாகவும் உடல் வருத் தத்தைக் கொடுப்பதாகவும் இருந்தது; இருந்தாலும் தாம் பின்னர் மேற்கொண்டு செய்து முடிக்க வேண்டியதா யிருந்த ஓர் இலக்கு கருதி, எப்பாடுபட்டாலும் அவற்றை யெல்லாம் பொருட்படுத்தாமலும் உளந்தளராமலும் உழைத்து வந்தார்.

தாம் தேர்ந்து எடுத்துக்கொண்ட துறையில் இறங்கி வேலை செய்வதானல், குடும்பத்தைவிட்டுப் பிரிந்து தனியே போதல் இன்றியமையாததாகும் என பர்பாங்க் எளிதிற் கண்டுகொண்டார். ஆகவே தாமிருந்த அந்நிலை

* Library. † Worcester.

யில் போதல் இயலுமா, இயலாதா? போனபின் தம் வாழ்க்கையை நடத்துவதெப்படி? என்பனபோன்ற வினுக்களையெல்லாம் எழுப்பிக்கொண்டு நன்கு ஆராய்ந்து பார்த்தார். அவருடைய ஒரு நாளைய செலவிற்குக் குறைந்தது ஐம்பது சென்டுகே*ளாவது பிடிக்கும். அவர் தொழிற்சாலையிற் பெறும் ஏழுநாட்கூலியோ அக்கணக்குப்படி ஆறுநாட் செலவிற்குக் கண்டதே யொழிய ஏழாம்நாள் வெறுங்கையராகவே இருக்கவேண்டியவரானுர். எனவே, அவர் தம் குறிக்கோளைக் கருதி வெளியேருவிடினும் தம் வயிற்றுப்பிழைப்புக் கருதியேனும் வெளியேறுதல் இன்றியமையாததாமெனக் கண்டார். எனினும், வெளியேறினுல் மீண்டும் ஒரு வேலை கிட்டுகிற வரையில் மிகவுஞ் சுருங்கிய செலவிற்காவது பணம் வேண்டுமே, என்ன செய்வது என அவர் திகைத்து வழியொன்றுந் தோன்ருமற் காலங்கழித்து வந்தார்.

இங்ஙிலையில் எதிர்பாராதவகையில், அவருடைய இலக்கு நிறைவேறுதற்கான வழியொன்று ஏற்பட்டது. ஒருநாள் தொழிற்சாலையிலுள்ள வேலைக்காரர்கள் சிலர் புல்லரியும் பொறி† ஒன்றைப் பல பகுதிகளாகப் பிரித்து வைத்துப் பின்பு அவற்றைக் கோக்க முயன்று கொண்டிருந்தனர். ஏறக்குறைய எல்லாப் பகுதிகளையும் மீண்டும் அவர்கள் கோத்துவிட்டாலும், ஒரேவொரு சிறு பகுதியாகிய துண்டை மட்டும் ஏற்ற இடத்தில் அவர்களாற் பொருத்த முடியவில்லை. பலரும் பல

---

* Cents. † Mower.

தடவை முயன்று பார்த்தும் முடியாது போகவே, அவர்கள் மனந்தளர்ந்து கைவிட்டுச் செல்ல முடிவு செய்தார்கள். அச்சமயத்தில் அருகிலிருந்து கூர்ந்து நோக்கிக் கொண்டிருந்த பர்பாங்க் சட்டென முன்வந்து, அத்துண்டை எவ்வாறு எந்த இடத்திற் பொருத்த வேண்டுமென்பதை அவர்களுக்கு எடுத்து விளக்கினார். அதனையறிந்த வேலைக்காரர்கள், சிறுவன் கூற்றென்று இகழ்ந்தொதுக்காது, கூறியவாறே செய்தனர். அத்துண்டும் பொருந்திற்று. அப்பொறியும் சிக்கலின்றி இயங்குவதாயிற்று. வயதில் மூத்தவர்களாகிய அவர்களுடன் இதுகாறும் தாமாக ஏதும் சொல்லாடாமலிருந்த அச்சிறுவர், அன்று ஒருவருங் கோராமலிருக்கையில் தாமாகவே முன்வந்து ஒன்றைக் கூறியது கண்ட அவ்வேலைக்காரர்கள் முதலிற் பெருவியப் பெய்தினர். பின் சிறிது நேரந் தாழ்த்து, "உனக்கு எப்படி அது தெரிய வந்தது? அத்துண்டு அந்த இடத்தில்தான் பொருந்தும் என்று நீ எவ்வாறு அறிந்தாய்?" என்று அவர்கள் பர்பாங்கைக் கேட்டார்கள். அதற்கு, "வேறு எங்கும் அது பொருந்தவில்லை யாகையால் தான்" என்று விடை கூறினார் பர்பாங்க். இவ் விடையிலேயே அவருடைய அறிவுநுட்பமும், கருதியதை எளிதில் முடிக்கும்வகை யறியுமாற்றலும் நன்கு விளங்கலாயின.

இவ்வாறு பொறியை எளிதிற் சீர்திருத்திய சிறுவர், முன் கூறியவாறு வேறு வேலை தேட நினைத்து ஆராயுங்கால், இயல்பாகவே அப்பொறியையும் தொழிற்சாலை

யையும் சீர்திருத்த வேண்டிய முறையில் ஒன்றுபடுத்தி ஆராயலானர். ஐந்தாறு வேலைக்காரர்கள் செய்யும் ஒரு வேலையை ஒரு பொறி கொண்டு செய்தால் ஆட்கூலி குறைந்து தொழிற்சாலைக்கு ஊதியம் மிகும் என்று அவர் கண்டார். கண்டவர் உடனே அரிதின் முயன்று தொழிற்சாலையிற் பயன்படுவதற்கேற்ற ஒரு பொறியைச் செய்தமைத்தார். தொழிற்சாலை முதலாளிகள் அப் பொறியால் விளையக்கூடிய பெரும்பயனை யுணர்ந்து அதனை உவந்தேற்றுக் கொண்டதோ டன்றி, பர்பாங் கின் சம்பளத்தை உயர்த்திப் பெருமைப் படுத்தினர் கள்; மேலும், அவர் பொறியமைக்குந் துறையிலேயே உழைத்து வருவாராளுல், விரைவில் அவர் பெருஞ்செல் வம் ஈட்டக்கூடுமென்றும் அவருக்கு அறிவு தெருட்டி ஞர்கள். தொழிற்சாலை முதலாளிகளே யன்றி, பர்பாங் கின் நண்பர்கள் பலரும், உறவின்முறையாரும் அவ் வாறே அவருக்கு வற்புறுத்திக் கூறினர்.

அவர்கள் எடுத்துக்கூறிய அறிவுரைகளுக்குக் குறுக் குச் சொல்லாமல் பர்பாங்க் ஏற்றுக் கொண்டாராயினும், அவர் கருத்தெல்லாம் வாழ்க்கையின் பேரிலக்காகத் தாம் கொண்ட ஒன்றையே நாடி நின்றது. உலகத்தில், இயற்கையா யுண்டாகிற பொருள்கள் எழிலோடு விளங் கினும், அவற்றினும் எழில் மிகுந்த புதுப்பொருள் களைக் கண்டு பிடித்தலும், அஃதியலாவிடத்து இயற் கையா யுண்டாகிற பொருள்களையே அழகு மிகுந்து விளங்குமாறு திருத்தி யமைத்தலும் என்ற இவ்

விரண்டுமே அவருடைய வாழ்க்கைக் குறிக்கோள்களாய் அவரது உள்ளத்தைக் கொள்ளை கொண்டிருந்தன. இக்கருத்துடைய இவர்தாமோ இரும்பாலாகிய பொறிகளை யமைத்து, அழகற்ற அவற்றின் உருவைக்கண்டு உளவமைதி பெறக்கூடியவர்! விரைவாகவும், குறைந்த செலவிலும் பல உழுகலப்பைகளைச் செய்யும் ஒரு பொறியை யமைப்பதைவிட, உலகோர் அதுவரையிற் கண்டிராத நிறங்களோடும் மணத்தோடுங்கூடிய புதிய மலர்களையும் பழங்களையுங் கண்டுபிடிக்க முயல்வதே அவருக்குச் சிறந்ததாகத் தோன்றிற்று.

இக் கருத்திற்குந் தாம் வேலைசெய்யுந் தொழிற்சாலைக்கும் எத்தகைப் பொருத்தமுமில்லை என்பதும், அத்தொழிற்சாலையில் வயிற்றுப் பிழைப்புக் கருதி வேலை செய்வதால் தம் கருத்து நிறைவேறுவதற்கில்லை என்பதும் நாளேற வேற பர்பாங்கிற்குத் தெளிவாக விளங்கிற்று. விளங்கவே, ஒருநாள் தொழிற்சாலை வேலையை விட்டு விட்டார்; பின்பு அவர் சந்தை விற்பனைக் காகும் படியாகக் காய்கறி வகைகளைப் பயிரிட்டனுப்பும் வேலையை மேற்கொண்டார். ஒருவாறு தாங்கொண்ட குறிக்கோளுக்கியைந்ததாகவே இத்தொழில் காணப்பட்டமையால், அதில் ஊக்கத்துடன் உழைத்து வரலானார். ஒரு சிறு தோட்டத்தில், பலவகைக் காய்கறி வகைகளுடன் உருளைக்கிழங்கையும் அவர் பயிரிட்டு வந்தார். அவ்வாறு பயிரிட்டு வரும் பலவகை உருளைக்கிழங்குகளில் ஒருவகை மிகவும் வளப்பமாகவும் உருட்சியாகவும் இருக்

கக் கண்டு, அதைத் தேர்ந்தெடுத்து ஏற்ற எருவிட்டு நன்ருகப் பயிர் செய்து வந்தார். விரைவில் அதன் சிறப்பு எல்லோருக்கும் தெரியவே, யாவரும் அதனைப் பரிந்து வாங்குவாராயினர். அதுமுதல் "பர்பாங்க் உருளைக் கிழங்கு" என்றே அது பெயர் பெறுவதாயிற்று. இவ்வினக் கிழங்கை அவர் பெருமளவிற்ருகப் பயிர்செய்து வந்தமையால், அந்நாட்டில் விரைவில் "உருளைக் கிழங்குக் கருப்பு" ஏற்படக்கூடும் என்று அஞ்சிய ஒரு நிலை நேராமலே தவிர்க்கப்பட்டது. புதிய இவ்வுருளைக்கிழங்கு பயிரிடும் உரிமையைச் சிறிது காலத்திற்குப்பின் பர்பாங்க் தோட்டப் பயிர்த்தொழிலாளி ஒருவருக்கு நூற்றைம்பது டாலர்கள் பெற்றுக்கொண்டு விற்றுவிட்டார். இவ்வுருளைக்கிழங்கின் விற்பனையால் அந்நாட்டிற்கு ஆண்டொன்றிற்கு இரண்டு கோடி டாலர்கள் புதுவருவாய் ஏற்பட்டிருப்பதாகக் கணக்கெடுக்கப்பட்டுள்ளது. பர்பாங்கின் அறிவாற்றலுக்கும், தொழிற்சிறப்புக்கும் இதைக் காட்டிலும் வேறு சான்று கூறுதல் வேண்டுமோ ?

இனி, இவ்வாறு பர்பாங்க் எளிய வாழ்க்கை நடத்திக் கொண்டு, தங் கருத்திற்கு ஒருவா றியைந்த தொண்டை நடத்தி வரும்போது, ஒரு நாள் அவர் தமது தோட்டத்தில் நண்பகற் கடும்வெயிலில் வேலை செய்து கொண்டிருக்குங்கால், ஞாயிற்றின் வெப்பந் தாங்க மாட்டாமல் கீழே விழுந்து மூர்ச்சையானர். நற்காலமாக அவ் வெப்பத்தாக்கால் அவர் உயிரிழக்கவில்லை ; எனி

னும் மிகுதியும் நலிவுற்றிருந்தார். நோய் நீங்கியவுடன், பர்பாங்க் இதற் கென்செய்வதென ஆழ்ந்து எண்ண லானார். ஏனெனில், தாம் கொண்ட கருத்திற்கிணங்க வெளிகளில் நண்பகற்பொழுதில் வேலை செய்வது அவருக்கு இன்றியமையாததா யிருந்தது. ஆகவே, மீண்டும் அத்தகைய வேலைக்குக் கடும்வெப்பத்தாக்கினால் இடையூறு நேரிடாதிருக்கவேண்டி, வெப்பக் குறைவாயுள்ள வேற்றூருக்கு உடனே தாம் புறப்பட்டுச் செல்லுதலே நேரிதென அவருக்குப் புலனாயிற்று. புலனாகவே, அவர் அவ்வாறே செய்து விடுவதென முடிவுகட்டினார். அம் முடிவின் பயனே அவர் லன்காஸ்டரை விட்டு, 1875-ஆம் ஆண்டில், தம்முடைய இருபத்தாறும் அகவையில் அந் நாட்டின் கடற்கரைப் பகுதியிலுள்ள காலிஃபோர்னியா* என்ற இடத்திற்குப் புறப்பட்டதாகும்.

---

* California.

௩. பர்பாங்க் காலிஃபோர்னியா சென்றடைதல்

காலிஃபோர்னியாவை நோக்கிப் புறப்பட்டபோது பர்பாங்கின் கையிலிருந்ததெல்லாம் பத்துடாலர் பணமும், பத்து "பர்பாங்க் உருளைக்கிழங்கு"களும், இரண்டொரு நூல்களுமேயாம். இருந்தாலும், செடி வளர்ப்பு முறையிலேயே தம் கருத்து முனைத்து நின்றதால், தம் வாழ்க்கைக்குறிக்கோள் நிறைவேறுதற்குரிய காலம் நெருங்கிற்றென்று நினைத்து மகிழ்ந்து கொண்டாரே தவிர, கையிற் பொருள் குறைவாயிருந்ததைப் பற்றி அவர் கவலைப்பட வில்லை. காலிஃபோர்னியாவை யடைந்ததும் அவர் அதைச் சேர்ந்த எந்நகரிலும் தங்காமல், நேரே அதன் ஒருபகுதியான **சான்ஃபிரான்ஸிஸ்கோ***வின் வடக்கே ஐம்பதுகற் றொலைவிற்கப்பாலிருந்த ஒரு பள்ளத்தாக்கைச் சென்றடைந்தார்.

இப்பள்ளத்தாக்கோ கடற்கரையினேரமாகத் தொடர்ந்து வளர்ந்திருக்கிற இரண்டு பெரிய மலைகளுக்கிடையே இருப்பது. மக்கள் நடமாட்டம் மிகுதியாக இல்லாமையால், காட்டுமரம், செடி, பூண்டுகள் முதலியன நிறைந்து பயனற்ற ஒரு தோற்றத்தை விளைத்தது. அப்பள்ளத்தாக்கில் வாழ்ந்துவந்த ஒருசில இடையர்களும் குடியானவர்களும் இயற்கையாய் முளைத்திருந்த பயிர்பச்சைகளைப் பயன்படுத்தி உயிர்வாழ்ந்திருந்தார்கள்; செடிவளர்ச்சிக்கும் தோட்டப் பயிர்

---

* Sanfrancisco.

விளைவிற்கும் எத்துணை ஏற்றதாக அச்சிறந்த பள்ளத் தாக்கு அமைந்திருந்த தென்பதை அவர்கள் உணரும் ஆற்றலற்றவர்களா யிருந்தார்கள். லூதர் பர்பாங்க் இவ்விடம் வந்துற்றபோது, இருபத்தைந்தாண்டு நிரம் பிய இளங்காளைப் பருவத்தினரா யிருந்ததனால், எத் தகைய வேலைக்கும் ஈடுகொடுக்கும் உளத்திட்பமும், பெரும் பொறையும், தளரா ஊக்கமுமுடையவராக இருந்தார். ஏதாவது வேலை கிடைத்தால் அதைச் செவ்வனே செய்து, மீத்து வைக்குந் தொகையைக் கொண்டு அப்பள்ளத்தாக்கில் ஒரு பகுதியை விலைக்குப் பெற்று அதன்கண் தோட்டப்பயிர் விளைவுசெய்ய வேண்டுமென்றே அவர் அங்கு வந்துசேர்ந்தது.

ஆனால், வேலையைத் தேடித் தேடி அலைந்தாலும் ஒரு வேலையும் அவருக்கு எளிதில் கிட்டவில்லை. அவர் கையிலிருந்த சிறு தொகையும் கரைந்துகொண்டே வந்தது. சுமைதூக்குதல், மரம்பிளத்தல் முதலிய கூலி வேலைகளையும் செய்துபார்த்தார். இத்தகைய வேலை கள் அவ்வப்போது கிடைத்தாலும் அவற்றாற் பெறுங் கூலி அவருக்கு ஒருவேளைச் செலவுக்கும் போதாமலிருந்தது. இவ்வாறு வேலை செய்துகொண் டிருந்த இடத்திற்கு அருகிலுள்ள ஒரு நகரத்தில் செல்வந்தர் ஒருவர் தமக்கு ஒருவீடு கட்டப்போவதாகக் கேள்வியுற்று, பர்பாங்க் ஒருநாள் அங்குச் சென்று, தமக்கு வேலை வேண்டுமென்று அவரிடங் கேட்டார். கட்டடவேலைக்குரிய கருவிக ளாவது, ஒரு செதுக்குக் கோடரியாவது இருந்தால்

மட்டும் வேலைக்கு வைத்துக்கொள்ளக்கூடும் என்ற மறு மொழி அவருக்குக் கிடைத்தது. உடனே தாம் மிகுத்து வைத்திருந்த பொருளில் ஏறக்குறைய முழுவதையுமே கொண்டு செதுக்குக்கோடரி ஒன்று வாங்கினார். வாங்கிக் கொண்டு, மீண்டும் மறுநாட் காலையில், அவர் அச்செல் வந்தர் வீட்டை அணுகியபோது, அங்கே குறிப்பிட்ட அவ்வேலைக்கு வேறு ஓர் ஆள் அமர்த்தப்பட்டு வேலை செய்து கொண்டிருக்கக் கண்டார்.

வாய்த்தவிடும் போய் அடுப்பு நெருப்பும் அணைந்த கதையாக, ஏமாறிய பர்பாங்க் மீண்டும் வேலைக்குத் திரியலானார்; பலநாள் அலைந்தபின் ஒரு கோழிப் பண்ணையில் கோழிக்கூடுகள் துடைக்கும் வேலையைப் பெற்றார். அவ்வேலைக்கு ஏற்பட்ட கூலியோ மிகவுங் குறைந்ததாகும். எனினும், ஒருவகையில் அது நிலை யான வேலையாக இருக்கும்போல் அவருக்குத் தோன் றியதால், அவர் அதனை ஒப்புக்கொண்டு செய்து வந்தார். அவர் செய்த அவ்வேலை மிகவும் அருவருக்கத் தக்கதொன்று என்று கூறவேண்டியதில்லை. எனினும், பிறரிடம்போய்ப் பல்லைக் காட்டிக் கெஞ்சிக் கூத்தாடி இரப்பதும், பிறர் ஏமாறும் சமயம் பார்த்திருந்து அவர் பொருளை வெளவி வாழ்க்கை நடத்துவதும் ஆகிய இவ்விரண்டைப் பார்க்கிலும் அவர் இவ்வேலை செய்து பிழைப்பது நேர்மையுடையதன்றோ? ஆகவே, அவர் வெறுப்பில்லாமல் தமக்கு இட்டவேலையை ஊக்கத் துடன் செய்துவந்தார்.

அங்கே அவருக்குப் படுக்கவும் இடங்கிடைக்காமல், தாம் துடைத்துவைத்த கோழிக்கூடுகள் ஒன்றினுள் ளேயே திங்கட்கணக்காக அவர் படுத்துறங்கிக் காலங் கழித்து வந்தார். குந்தியிருக்கவாவது ஒரு கொட்டிலைப் பிடிக்கலாமென்றுலோ அதற்குரிய அற்ப வாடகையைக் கொடுப்பதற்கும் அவருக்கு வழியில்லை. சிற்சில காலங் களில் இந்த வேலைக்குக்கூட இடர்ப்பாடுகள் நேர்ந்து, அவர் வேலையின்றிப் பட்டினிகிடக்க வேண்டியவரு மானுர். அவ்வாறு உணவுக்கு வகையின்றிப் பட்டினி கிடக்க நேர்ந்தபொழுதெல்லாம், அவர் அவ்வூரிலுள்ள இறைச்சிக் கடைக்குச் சென்று, அங்கு நாய்களுக் கென்று போடப்பட்டிருக்கும் என்புத் துண்டுகளிற் சில வற்றைப் பொறுக்கி எடுத்துவந்து, அவற்றில் ஒட்டிக் கொண்டிருக்கும் தசையைச் சுரண்டி அதனை உணவாக உண்டு பசியாறுவார்.

இவ்வாறு சிலகாலங் கழிந்தபின்னர், ஒரு சிறு தோட்டத்தில், “பிச்சைக்காரக் கூலி” என்று இகழ்ந்து சொல்லப்படும் மிகக்குறைந்த சம்பளத்தில் ஒருவேலை கிடைக்க, அதில் அவர் அமர்ந்தார். அவ்வேலை நிலை யாகச் சிலகாலந் தள்ளுமென்று அவருக்கு ஒரு நம்பிக்கை யிருந்தது. ஆகவே, அவர் தமது வழக்கப்படி ஊக் கத்தோடும், உள்ளக் கிளர்ச்சியோடும் அவ்வேலையைச் செய்துவந்தார். ஆனுல், வருகிற சிறிய தொகையைக் கொண்டு வசதியான ஓரறையைத் தங்குமிடமாகத் தேடிக்கொள்ள வகையின்றி, களஞ்சிய அறை

ஒன்றின்மேலிருந்த ஈரந்தாங்கிய இருட்டறை யொன்றில் வசித்துவந்தார். ஈரமாய்விடும் உடைகளைப் பிரித்து அவ்வறையில் நாட்கணக்காக உலர்த்திலுைம் அவை உலருவதில்லை. ஆகவே அவ்வறையின் வசதிப்பாட்டைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ!

வசதிக் குறைவற்ற இவ்வாழ்க்கையும், போதிய உணவைக் காலா காலத்திற் பெருமற் பன்முறை பட்டினி கிடக்க நேர்ந்தமையும், அவர் ஆற்றலுக்கு மீறிய உட லுழைப்பும் ஒருங்கு சேர்ந்து அவரது உடல் நலத்தைக் கெடுக்க, விடாக் காய்ச்சல் அவரைப் பற்றிக் கொண்டது. அதனல் அவர் தாம் செய்துவந்த வேலையையும் விட்டு விட வேண்டியவரானர். உடல் மெலிந்து வாடி, ஏனென்று கேட்பாரற்று அவர் உயிர்போகக் கிடந்த ஒருநாள் அயலில் வாழும் பெண்மணி ஒருத்தி அவரது நிலையினைக் கண்டு உளமிரங்கித் தன்னிடமிருந்த பசுவின் பாலை அருந்துமாறு வேண்டினள். பிள்ளைகள் பலவுடைய அப்பெண்மணி தம்மைப்போல் தீரா வறுமையுற்றவ ளென்று முன்னரே அறிந்திருந்த பர்பாங்க் அவள் கொடுத்த பாலை அருந்த முதலில் மறுத்துவிட்டார். அப்பாலிற்குரிய விலையைக் கொடுக்கத் தம் கையிற் காசேதும் இல்லை யாகையாலும், கடனகை அதைப் பெற்ருலும் அக்கடனைத் தீர்ப்பதற்குள் இறந்து விடக்கூடிய நிலைமையில் தாமிருந்தமையாலும், அவள் மனமிரங்கி அளித்த உதவியைத் தாம் ஏற்றுக்கொள்ளக்கூடா மையை பர்பாங்க் தழுதழுத்த குரலிற் கூறினர். அவர்

எத்துணை மறுத்துக் கூறியும் அப்பெண்மணி ஒரே பிடியாகப் பாலை அருந்தினாலன்றித் தான் அவ்விடத்தை விட்டு நகரப்போவதில்லை என்று கூறவே பர்பாங்க் மனம் இசையாமலிசைந்து பாலை வாங்கி யருந்தினார். அப்பாலே அமிழ்தமாய் அவரை அன்று மறலியின் கொடுங் கைகளிலிருந்து மீட்டு உயிர்பிழைக்கச் செய்தது.

காய்ச்சல் தீர்ந்தபின், எலும்புந் தோலுமாய் இளைத்துப்போயிருந்த பர்பாங்க், மெள்ள எழுந்து நடமாட உடல் இடங்கொடுத்ததும் வேலைக்காக ஊரூராகச் சுற்றித் தேடியலைந்தார். ஏதோ நல்ல வேளையாக அவருக்கு ஆங்காங்குச் சிறுசிறுவேலைகள் தட்டாமற் கிடைத்து வந்தன. அவ்வேலைகளைச் செய்து கூலிபெற்று அதில் ஒரு சிறு தொகையை மீத்து வைக்கக் கூடியவருமானார். மேலும், மிகவும் வருந்தி யுழைத்து வந்தமையால் விரைவில் அவர் ஒரு சிறு தொகையை இருப்பாக ஒரு பொருட் பாதுகாப்புக் கழகத்தில்* தம் கணக்கில் போட்டு வைக்கும் நிலையை அடைந்தார். அதன் பின், அப்பொருளைக் கொண்டு தாமே ஒரு தொழிலைச் சொந்தத்தில் தொடங்கி நடத்தலாம் என்ற முடிவிற்கும் அவர் வரலானார்.

அம்முடிவிற்கு வந்தவுடன் "சாந்த ரோஸா"† என்னுமிடத்தில் ஒரு சிறு நிலப்பகுதியை விலைக்குப் பெற்று அதில் தாம் வசிக்க வசதியான இடத்தைக் கட்டிக் கொண்டபின், மிகுந்த பகுதியில் தோட்டப் பயிர்

---

* Bank. † Santa Rosa.



சாந்தரோஸாவிலுள்ள பர்பாங்கின் வீடு பக்கம் உஉ

விளைவு செய்வதென அவர் முடிவுகட்டினர். பின்னர் அவர் விதைகள் சேர்ப்பதும், மரஞ்செடி கொடிகட்குரிய கன்றுகள், பதியன்கள், நாற்றுக்கள் முதலியவற்றைப் பயிர்செய்து விற்பதும் தம் தொழிலாக மேற்கொண்டார். அவர் தாம் நிலையாய்க் குடியேறிய அவ்வூரைப் பற்றித் தம் தாயாருக்கு எழுதிய கடிதமொன்றில், "இயற்கையமைப்பைப் பொறுத்தவரையில், இந்நிலவுலகில் முதன்மையாகத் தேர்ந்தெடுக்கக்கூடிய இடம் இஃதொன்றேதான்" என்று அதனைப் புகழ்ந்து வரைந்துள்ளார்.

பர்பாங்க் விலைக்குவாங்கித் தொழில் தொடங்கிய அச்சிறு தோட்டமே பிற்காலத்தில் உலகெங்கும் பரந்த புகழுடன் விளங்குவதொன்றாயிற்று. நேர்த்தியான பழங்கள், மலர்கள் முதலியவை வேண்டுமாயின், அத்தோட்டத்திற் கிடைக்கப் பெறலாம் என்ற நற்பெயர் எங்கும் பரவுதலாயிற்று. அத்தொழிலாற் கிடைத்த ஊதியம் முதற்கண் சிறிதாகவே இருந்தாலும் அவருடைய வாழ்க்கைக்கு அது போதியதாயிருந்தமையால் அவர் கவலையின்றிச் சிற்சில காலங்களில் ஓய்வும் பெற்று வந்தார். இவ்வாறு ஓய்வு பெற்ற காலங்களிலெல்லாம் அவர் டார்வின்*, எமர்ஸன்† முதலிய பேரறிஞர் எழுதிய ஆராய்ச்சி நூல்களை ஆழ்ந்து படித்துக் கொண்டுவந்தார்.

இவ்வாறிருந்துவருங்காலத்தில், அவருடைய காலச் சக்கரத்தில், மேலும் நற்காலங் கிட்டியதென்று

* Darwin. † Emerson.

அறிவித்தற்குரிய சூழற்சியொன் றுண்டாயிற்று. ஒருநாள் அவருக்கு வந்த கடிதங்கள் ஒன்றில், பெரிய செல்வந்தர் ஒருவர் வாதுமைமரப் பண்ணை ஒன்று வைப்பதற்காக இருபதினுயிரம் வாதுமைக் கன்றுகள் ஒன்பது திங்களுக் குள் தமக்கு வேண்டியிருப்பனவாகவும், அதற்கு எவ்வளவு தொகை பிடிப்பதாயிருந்தாலுந் தாம் கொடுத்து விடுவ தாகவும் எழுதியிருந்தார். ஒரு வாதுமைக் கன்றைப் பெயர்த்து நடக்கூடிய அளவிற்குப் பயிர் செய்வதானல் குறைந்தது இரண்டரை ஆண்டுகளாவது பிடிக்கும் என் பதை பர்பாங்க் அறிவார்; கேட்பவரோ ஒன்பது திங் கள்களில் வேண்டுமென்கிறார். மரஞ்செடி நூலாராய்ச்சி யில் தாம் இதுகாறும் ஆராய்ந்து வைத்திருந்த ஒட்டு முறை* யைக் கையாள்வதற்கு இதுவே ஏற்ற சமய மென்று பர்பாங்க் கண்டுகொண்டார்; வேண்டுகோளை ஒப்புக்கொண்டார்; ஊரெங்கும் அலைந்து ஏற்ற வேலைக் காரர்களைத் தேடிக்கொண்டார்; இரவும் பகலுமாய் ஓயாது உழைத்தார்; ஒன்பதாவது திங்கள் முடிவில் இருபதினுயிரங் கன்றுகள் கேட்ட செல்வர்க்குக் கேட்ட வாறே அனுப்பி வைத்தார்; பைநிறையப் பணத்தையும் பெற்றார். இவ்வருஞ்செயலைக் கண்ட ஊராரெல்லோரும் அவரை ஓயாது புகழ்வாராயினர். புகழ் பரவுவதற் கேற்ப அவரது தொழிலும் மேன்மேலும் வளர்வதா யிற்று. ஏமாற்றுதல் என்பதே ஒருசிறிது மின்றிக், கூறியது கூறியவாறே, வேண்டிய விதைகள், பதியன்கள்

---

* Grafting.

முதலியவற்றை விற்றுவந்தமையால் உள்ளூரிலும் வெளியூர்களிலுமுள்ள வணிகர்களெல்லாம் அவரிடம் பெரு நம்பிக்கை வைத்து அவரிடமே தொழில் செய்வாரானார்கள்.

ஒருநாள், கையிற் பணமில்லாதிருந்த நிலைமையில், தொழின் முறையில் நல்ல ஊதியம் வரக்கூடிய ஒரு வழி அவருக்குப் புலப்பட்டது. ஆனால், அதற்கு அன்று குறைந்தது அவரிடம் நூறு டாலர்களாவது இருந்தால் தான் அவ்வழியைப் பின்பற்றித் தொழிலாற்றி ஊதியம் பெற அவரால் முடியும். பர்பாங்க் தமக்குத் தெரிந்த நாலைந்து நண்பர்களை நெருங்கி ஒரு சிறு தொகை கடனாகக் கேட்டுப்பார்த்தார். ஆனால், ஒருவரும் கொடுக்க முன்வரவில்லை. தலையிறக்கங் கொண்டவராய் பர்பாங்க் வீடுதிரும்பி வீட்டினுள் நுழையுந் தறுவாயில், யாரோ இவரைக் கைதட்டிக் கூப்பிட்டதுபோல் தோன்றிற்று. திரும்பிப் பார்த்தார்; சாலையிலிருந்து ஒருவர் தம்மை விளிக்கக் கண்டார். கண்டு, அருகே சென்று பார்த்த போது, விளித்தவர் அவ்வூரிலுள்ள பணக்காரர்களில் ஒருவரென்றும், ஆனால் அவர் ஒருவருக்கும் ஒரு செம்பாலடித்த காசுகூடக் கடனாகவேனுங் கொடுத்தறியாத இவறன்மை படைத்தவரென்றும் பர்பாங்க் கண்டு கொண்டார்.

விளித்தவர் :— தம்பி! உன் நடவடிக்கைகளை நான் நெடுநாட்களாகக் கூர்ந்து நோக்கிக்கொண்டு வந்திருக்கிறேன். எப்பொழுதும், உன் வேலையுண்டு நீ யுண்டு, என்

றிருப்பவன் நீ. ஆனாலும் உன்னைப்போல் மிகவுந் திறம் படத் தொழிலாற்றும் ஒருவன், நீ ஓயாது உழைப்பது போல் உழைக்க வேண்டியதில்லையே! உனக்கு அடிக்கடி பொருள் முட்டுப்பாடு நேர்வதுபோல் தெரிகின்றதே? இப்போது தொகை ஏதேனும் வேண்டுமோ?

பர்பாங்க் :—நூறு டாலர் மட்டும் இன்று கிடைத்தால் ஒன்றுக்குப் பத்து வீதம் ஊதியங் கிடைக்கக்கூடிய ஒரு புதிய வேலையைத் தொடங்குவேன். ஆனால் தொகை தான் கிடைக்கவில்லை!

விளித்தவர், "அப்படியா! இதோ, நூறுக்கு இரு நூறு டாலர்களாக வைத்துக்கொள். இத் தொகைக்கு நீ சீட்டொன்றும் எழுதிக்கொடுக்க வேண்டியதில்லை; வட்டியும் செலுத்தவேண்டியதில்லை. எப்பொழுது தொகையைத் திருப்பிக்கொடுக்கக் கூடுமோ அப் பொழுது நீ கொடுத்தாற்போதும். ஆகவே குறுக்குச் சொல்லாமல் தொகையைப் பெற்று உன் வேலையைப் பார்" என்று கூறிக் கொண்டே இருநூறு டாலர்களை எடுத்துக் கொடுத்துவிட்டுப் போய்விட்டார்; பர்பாங்க் கொண்ட வியப்புத் தீர்தற்கு அரைநாள் ஆய்விட்ட தென்று சொல்லலாம். இந் நிகழ்ச்சியால் உள்ளூரில் பர்பாங்கிற்கு எத்துணை நன்மதிப்பு ஏற்பட்டதென்பதும், ஊரார் அவரிடம் எத்துணை நம்பிக்கை வைக்கத் தொடங் கினர் என்பதும் நன்கு விளங்கும்.

பர்பாங்கின் தொழில், ஆண்டொன்றிற்குக் குறைந் தது பதினாயிரம் டாலர்களாவது மீதியாய் நிற்கக்கூடிய

ஸெபாஸ்டபோல் ஆய்வுப்புலம்　　　பக்கம் உஎ

அளவிற்குச் செழிப்பாக நடைபெற்று வந்தது. எனினும், விதைகள் சேர்த்து விற்பதையும், கன்றுகள் நாற்றுக்கள் முதலியவற்றைப் பயிர் செய்வதையும் விட்டுவிட்டுத் தாமே செடி கொடி மரங்கள் முதலியவற்றை வளர்த்து வருவதென பர்பாங்க் முடிவுகட்டினர். அம் முடிவைக் கேட்டு அவருக்கு அறிமுகமுள்ள எல்லோரும் அவரைக் கண்டித்துத் தடுக்க முயன்றார்கள். வேறு சிலர் மிகவும் இரக்கங்கொண்டு நன்மதி கூறினார்கள். இன்னுஞ் சிலர் இழித்துரைத்தார்கள். ஒன்றுக்கும் வாய் திறவாமல் எல்லாவற்றையுங் காதில் வாங்கிக்கொண்டார் அப்பெரியார். 1893 ஆம் ஆண்டில், தாம் செய்துவந்த தொழிலை அறவே நிறுத்திவிட்டு, முன் முடிவுசெய்திருந்ததும், தம் வாழ்க்கையிலக்குக்குக் கொண்டுய்ப்பதுமாகிய தொழிலைச் செய்யத் தொடங்கினர். சாந்தரோஸாவிற்கு எட்டுக்கல் தொலைவில் ஸேபாஸ்டபோல்* என்ற இடத்தில் அவர் தம்முடைய ஆய்வுப்புலம்† அமைப்பதற்குரிய பெரு நிலப் பகுதி யொன்றை விலைக்கு வாங்கினர்; வேலையாட்களையும் நிறைய அமர்த்திக் கொண்டார்; முப்பது ஆண்டுகளுக்கு மேலாக நுணுகி நுணுகி ஆராய்ந்து வந்திருந்த முடிபுகளையெல்லாம் உட்கொண்டு சிறந்த முறையில் தளரா ஊக்கத்துடனும் விடாமுயற்சியுடனும் தமது பணியி லிறங்கினர். நெடுநாளாகச் செய்துபார்க்க வேண்டுமென்று கருதியிருந்த முறைகளை யெல்லாம் செய்வதற்குச் சமயம் அவருக்கு இப்போது வாய்த்தது;

---

* Sebastapol. † Proving Grounds.

வாய்க்கவே, பற்பல புதியபொருள்களை அவர் கண்டு பிடித்தார் ; கண்டார் வியக்குமாறு இயற்கையில் தோன்றிய மலர்கள், இலைகள் முதலியவற்றில் பல்வகை மாறுதல்கள் அமையச் செய்தார். அமெரிக்கா முழுவதிலும், ஏனைய பெரு நிலப் பகுதிகளிலும் அவர் பெயரும் புகழும் ஓங்கி வளரலாயின. அவர்தம் பொருள்வருவாயும் மிகுந்தது. எனினும், அவர் கோரிய அளவிற் பரந்துபட்ட ஆராய்ச்சியைச் செய்யச் சிற்சில சமயங்களில் பொருள் முட்டுப்பாடு அவருக்கு நேரிடாமலிருக்கவில்லை. நாட்டிலிருந்த செல்வந்தர்களாவது, அரசாங்கத்தாராவது அவருக்குப் பொருள் கொடுத்துதவி அவர் மேற்கொண்ட ஆராய்ச்சியை ஊக்க முன்வந்திலர். இதனை நினைத்துநினைத்து பர்பாங்க் பன்முறை உளங்கவல்வா ராயினர்.

இந் நிலையிற்றான் எதிர்பாராத வகையில் **கார்னீஜி அறநிலையத்தா†** ரிடமிருந்து பர்பாங்கிற்குப் பெரியதோர் உதவி வந்தது. தோட்டப் பயிர் செய்யுந் துறையிலும், மரஞ் செடி கொடிகளை வளர்த்துக் காத்துவருந் துறையிலும் அவர் காட்டிய இணையற்ற திறமையையும், அதனால் நாட்டிற்கும் மக்கட்கும் விளைந்து வருவதும், விளைய விருப்பதுமாகிய பெரு நன்மையையுங் கணித்தறிந்த அந் நிலையத்தார் அவர் செய்த வேலை மேன்மேலும் பொருள் முட்டுப்பாடின்றி வளர வேண்டியதின் இன்றியமையாமையை உணர்ந்து, அவருக்குப் பொரு

*Carnegie Institute.

ளுதவி செய்ய முன்வந்தார்கள். ஆண்டொன்றிற்குப் பதினாயிரம் டாலர்கள்வீதம் பத்தாண்டுகள் தொடர்ந்து நூறாயிரம் டாலர்களை நன்கொடையாக அவருக்கு அளிப்பதென அவர்கள் முடிவுகட்டினார்கள். 1905 ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் முதன்முறையாக ஒரு பதினா யிரம் டாலர்கள் அவருக்கு வழங்கப்பட்டன. அது முதல் பர்பாங்கின் இணையற்ற வேலைகள் எத்தகைய இடையூறுமின்றிச் செவ்வனே நடைபெற லாயின.

ச. பர்பாங்கின் முறைகளும், ஆராய்ச்சிப் பயன்களும்

இளமையிலிருந்தே தமது உளத்தெழுந்த உணர்ச்சியை ஒருமுகப்படுத்தி அறிவை வளர்த்துவந்ததன் பயனாக பர்பாங்க் மேற்கொண்ட நோக்கங்கள் மூன்று வகைப்படும் :—

1. இயற்கையிற் காணப்படும் பழங்கள், மலர்கள், புல் வகைகள், மரங்கள், காய்கறி வகைகள் ஆகியவற்றின் தோற்றம், நிறம், மணம், சுவை முதலியவற்றைக் கூட்டியும் திருத்தியும் மாற்றியும் சீர்செய்தல்.

2. காட்டுச்செடி யினங்களையும், பயன் குறைந்து வரும் செடி யினங்களையும் நாட்டில் வளர்க்கப்படும் செடி கொடி யினங்களோடு ஒட்டும் முறையினால் இரண்டினங்களையும் பயன்பெறச் செய்தல்.

3. அதுவரையில் உலகிற் காணப்படாதிருந்த பல புதிய செடி, கொடி, மரம், மலர், பழம், புல் முதலியவற்றை உண்டுபண்ணுதல்.—இதுவே செடி வளர்ப்புத் துறையின் தலைசிறந்த வெற்றிச்செயலாகும்.

இம்மூன்று நோக்கங்களையும் கருதி பர்பாங்க் வேலை செய்துவருவதை இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம் :—

1. வளர்ப்பு :—வளர்ப்பு என்றால் பர்பாங்கின் தொழின்முறைப்படி இருவேறு செடிகளை, ஒன்றுடன் ஒன்றை ஒட்டி உரம்பெறச் செய்தல் என்றுதான் பொருள். ஒரு மரம் அல்லது செடி அல்லது கொடியின்



முள்ளுள்ள இயற்கை நாகதாளியும்,
முள்ளற்ற பர்பாங்க் நாகதாளியும்

பக்கம் ௩௧

பூவிலுள்ள போலந்தாதை* எடுத்து மற்றொரு செடி அல்லது மரம் அல்லது கொடியிலுள்ள மலர்க்கருவிற் செலுத்துதல். இதை, "தாது செலுத்தல்†" என்று சொல்லலாம். இவ்வாறு செய்வதால் பூத்துங் காய்க்காம லிருக்கும் மரங்களெல்லாம் வளம்பெறக் காய்க்கும்.

2. தேர்வு:—இது தாம்மேற்கொண்ட ஆராய்ச் சிக்கு எந்தெந்த மரம் செடி கொடி யினங்களைத் தேர்ந்து கொள்ளுதல், எதெதனைக் கழித்துவிடுதல் என்பதாகும். முன்கூறிய வளர்ப்பு வெற்றியடைவது இத் தேர்வு சரிவர நடைபெற்றால்தான் என்பது உணரத்தக்கது.

இம் முறையைப் பின்பற்றி பர்பாங்க் ஆராய்ந்து உழைத்ததன் பயனை அளவிட்டுக் கூறமுடியாது. 'அவர் சாதாரண மகனல்லர், ஒரு சித்தரே!' என்று உலகோர் கூறக்கூடிய அளவிற்கு அளப்பரும் விந்தையான வேலை களை யெல்லாம் அவர் செய்துமுடித்துள்ளார். அவற் றுட் சில பின்வருவனவாம்:—

முள் நிறைந்த நாகதாளிச் செடியை முள்ளற்றதாக வும் சுவையுள்ளதாகவும் மாற்றி, மக்களுக்கும் மாக்களுக் கும் ஒருங்கே உணவாகப் பயன்படுமாறு அவர் செய்தார். ராஸ்ப் பேர்ரி‡ என்னும் ஒருவகைச் செடியையும், பிளாக் பேர்ரி$ என்னும் மற்றொருவகைச் செடியையும் அவர் தேர்ந்தெடுத்து ஒட்டிப் பிரைமஸ்பேர்ரி|| என்ற ஒரு புதிய பழவகையை உண்டுபண்ணினர். ப்ளம்o என்னும் ஒரு

---

*Pollen. †Pollenation. ‡ Raspberry.

$ Black berry. || Primus berry. o. Plum.

வகைப் பழத்தையும், வாதுமைப் பழத்தையும் இணைத்து அதிலிருந்து *ப்ளம்காட் என்னும் ஓர் அழகிய சுவை நிறைந்த பழத்தை அவர் உண்டுபண்ணினர். இன்னும், ப்ளம் என்ற அப்பழவகையில் மட்டும் அவர் செய்துள்ள மாறுதல்களும் திருத்தங்களும் எண்ணிலவாம். உலகிலுள்ள எம்மரங்களும் வளர்கிற விரைவை விட, மிகவும் விரைவாக வளரக்கூடிய ஒரு புதுவகை மரத்தை அவர் உண்டுபண்ணினர். சஸ்தா டேய்ஸி† என்ற ஒருவகை அல்லிமலரைப் புதிதாக அவர் உண்டுபண்ணி, அம்மலர்கள் ஒவ்வொன்றும் குறைந்தது ஆறேழங்குலம் குறுக்களவுடையதாக மலருமாறு செய்தார். பீநாற்றப் பூவை யொத்த டாலியா‡ என்ற ஒரு பூவகையை எடுத்து, அவர் அரிதின் முயன்று ஆராய்ந்து அதன் அருவருக்கத்தக்க நாற்றத்தைப் போக்கி நன்மணம் வீசுமாறு செய்தார். இலந்தைப் பழம், திராட்சைப் பழம், பீச்$, குவின்ஸ்|| முதலிய பல பழவகைகளை அவர் பல்வேறு வகையிற் செம்மை செய்துள்ளார். ப்ளம் என்னும் ஒரு பழ வகையில் அவர் செய்திருந்த திருத்தங்களால் விளைந்த அதன் பல்வகையான விளைவையும், பெரு விற்பனையையும் மட்டும், அவர் தமக்கே உரிமையாக்கிக் கொண்டிருப்பின், அஃதொன்றுமே ஆண்டொன்றிற்கு அவருக்கு இருநூறாயிரம் டாலர்கள் ஊதியங் கொடுத்திருக்குமென்று தேர்ந்த வணிகரொருவர் கணக்கிட்டுக்

* Plumcot. † Shasta Daisy. ‡ Dhalia. $ Peach. || Quince.

கூறுவாரானல், பர்பாங்க் செய்த வேலேயின் பெருமை யைச் சொல்லவும்போமோ ?

ஒரு செடியையோ, மரத்தையோ ஆராய்ந்து தேரத் தொடங்கினல், அவர் அச்செடி அல்லது மர வகையில் குறைந்தது இரண்டாயிரம் அல்லது மூவாயிரம் உருப்படிகளேயாவது ஒருங்கே நட்டுப் பயிராக்கித்தான் ஆராய்ச்சி செய்வார்; ஒன்றிரண்டை மட்டும் நட்டு ஆராய்ந்து முடிவுகட்டும் வழக்கம் அவரிடமில்லே. சஸ்தா டேய்ஸி என்ற அல்லிமலரைப் பருமனும் அழகாயுமாக்குவதற்கு ஆராய்ச்சிசெய்யத் தொடங்கியது எழுநூறு அடி நீளத்துக்கு அம்மலர்ச் செடிகளேப் பயிர்செய்துகொண்ட பின்னரேதான். ஒரே மரத்தின் கிளேகளில் ஐந்நூற்றுக்கு மேற்பட்ட வேறு வேறு மரங்களின் கிளேகளே நறுக்கி ஒட்ட வைத்துக்கொண்டு அவர் ஆராய்ச்சிசெய்திருந்தாரானல், அவ்வராய்ச்சியின் விரிவை என்னென்று எடுத்துரைப்பது! தமக்குத் துணே புரிய நூற்றுக்கணக்காக ஆட்களே அமர்த்திக் கொண்டிருந்தாராயினும், ஒவ்வொரு வேலேயையும் தாமே நேராகப் பார்வையிட்டாலொழிய அவர் உள்ளம் அமைதி பெறுவதில்லே.

“என்னுடைய முயற்சியால் பழங்களின் நலம் மிகுந்து மலர்களின் அழகு பெருகிறைற் போதும்; அதற்குமேல் நான் ஒரு கைம்மாறும் எதிர்பார்க்க வில்லே” என்று பர்பாங்க் அடிக்கடி கூறிவருவதுண்டு. அவர் ஆராய்ச்சியின் விரிவை அறிந்தவர்கள் அவர் தாம்

கூறிவந்ததை எவ்வாறு செயற்கையிற் செய்துமுடித்துக் கர்ட்டினூர் என்பதை யுன்னி யுன்னி உளங் குளிரார் களோ! "செயற்கரிய செய்வார் பெரியர்" என்ற தமிழ்மறைவாணர் அருளுரைக்குமர நூற்றுறையில் எடுத் துக்காட்டாகச் சிறந்து இலங்குபவர் லூதர் பர்பாங்க் என்பது யாவரும் ஒப்பமுடிந்ததோர் உண்மையாகும்.

ரு. நாள்முழுதும் ஓயாவேலை

பர்பாங்கின் பெயரும் புகழும் பரவப் பரவ, அவருக்கு உண்பதும் உறங்குவது மொழிந்த மற்ற நேரங்களில் ஓரிமைப் பொழுதும் ஓய்வு கிடைப்பது அரிதாயிற்று. அவரைக் கண்டுபோவதற்கென்று அவர் வீட்டை நாடிவரும் ஆயிரக்கணக்கான மக்களுடன் இரண்டொரு சொற்பேசி அவர்களை வழியனுப்பவும் அவரால் இயலாதாயிற்று. இங்நிலையிலும் அவர் தாம் மேற்கொண்ட ஆராய்ச்சி வேலையைச் செய்து முடித்து விடுவாரென்றால், அவர் உழைப்பின் மிகுதி எவ்வளவென்று எளிதில் ஊகிக்கலாம்.

காலையிற் படுக்கையை விட்டு எழும்போதே பர்பாங்க் மிகுந்த கவலையுடனேயே எழுவார்; அக்கவலை பொழுதேறவேற மிகுமேயன்றிக் குறையாது; இரவில் மிகவும் அலுத்துக் களைத்துப் படுக்கைக்குப் போவார். அப்பப்பா! உள்ளூரிலிருந்தும், வெளியூர்களிலிருந்தும் எத்தனை பேர்தான் நாளெல்லாம் அவரைப் பார்க்க வந்தபடியே யிருப்பது! குறிப்பிட்ட வேலை எதுவுமின்றி அவரையும் அவர் தோட்டத்தையும் பார்த்துப் போகவே அவர்கள் வருவதாகும். அறிவிற் சிறந்த ஒரு பெரியாராகிய அவரைக் கண்டு அவருடன் இரண்டொரு பேச்

சுககளாவது பேசி, அவர்கள் தங்களுக்கிருக்கும் அன்புகனிந்த ஈடுபாட்டைத் தெரிவித்துவிட்டுச் சென்றால்தான் அவர்களுக்கு ஒருவாறு உள்ள அமைதி ஏற்படும் போலும்! ஆயினும், அதனால் பர்பாங்கின் வேலைக்கு எத்துணைக் குந்தகம் நேர்கின்றது என்பதை அவர்கள் அறியார்கள்.

பர்பாங்கோ இயற்கையாய் அன்போடியைந்த உளப்பான்மை படைத்தவர்; செல்விருந்தோம்பி வரு விருந்து பார்த்திருக்கும் சிந்தை படைத்தவர்; இன் சொல் இனிதீன்றல் கண்டு வன்சொல் வழங்காதவர்; ஆதலால், உண்மை நட்பினர் பலரைக் கொண்டவர். எனவே, அவரை நாடிவரும் பொதுமக்கள் ஒருபுற மிருக்க, இடைவிடாது வந்துபோகும் நண்பர்கள் எத்தனை பேர்! கொண்ட பணியிற் கருத்தூன்றி இடையறாது உழைக்க வேண்டிய ஒருவருக்கு இப் பெருவரவு நல்வரவாவ தெவ்வாறோ!

அவர் வேலையோ ஒரு நாளைப்போல மறுநாளிராத தாகும். செடிகளுக்கு ஊட்டமளிக்கும் ஆராய்ச்சியில், அவர் ஈடுபட்டிருக்குங் காலத்தில், அவர் வைகறைப் பொழுதிலேயே எழுந்துவிடுவார்; எழுந்தது முதல் பொழுது போகிற வரையில் எருவிடல், மண் தள்ளல், செடி யொட்டல், தாது செலுத்தல் முதலிய நுட்பமான வேலைகளிலேயே தம் கருத்து முழுவதையுஞ் செலுத்தி உழைத்து வருவார். மற்றைக் காலங்களில், காலை ஏழு மணிக்குத்தான் அவர் படுக்கையை விட்டு எழுவார்;

எட்டு மணிக்குக் காலையுணவருந்துவார். முந்தின நாள் உழைப்பினால் அவர் மிகவுங் களைத்திருந்தாரானால், சிற் சில சமயங்களில் ஒன்பது அல்லது பத்து மணிக்குத் தான் எழுந்திருப்பார். பேருழைப்பிற்குப் பின் போதிய ஓய்வெடுத்துக்கொண்டால்தான் உடலும் உளமும் தளர்ச்சியுறாமல் வேலை செய்யும் என்பது அவர் கொள்கை.

தொழில் செய்யத் தேர்ந்துகொண்ட இடம் சம மான தட்பவெப்ப நிலை வாய்ந்த ஓரிடமாக இருந்த தால், ஆங்கு, அவருக்கு ஆண்டு முந்நூற்றறுபத்தைந்து நாட்களும் வேலையிருந்துகொண்டே யிருந்தது. நூற்றுக் கணக்காய் வேலை செய்யும் வேலையாட்களை அவர் கண் காணிக்க வேண்டியவராயிருந்தார். அவ்வேலைக்காரர்க ளெல்லாம் பெரும்பாலும் வேலையிற் றேர்ந்தவர்களே யாயி னும், அவருடைய கண்பார்வை யிருந்தாலன்றி எதையுந் தாமாகச் செய்துவிட அஞ்சுபவர்கள். சிற்சில சமயங் களில், எழுந்தவுடன் காலையுணவை அருந்தாமற்கூட அவர் தோட்டத்திற்குச் சென்று சில வேலைகளை நேரிற் பார்த்துச் சீர்திருத்தி வரவேண்டியதாகவு மிருக் கும். வீட்டுச் சாளரத்தருகில் எழுந்துநின்று வேலை யாட்கள் தோட்டத்தில் வேலை செய்வதைப் பார்ப்பவர், அங்கு ஒரு மூலையில் ஒருவன் சரியாக வேலை செய்யவில்லை என்று எப்படித்தான் கண்டுகொள்வாரோ தெரியாது! உடனே அவர் தடதடெனை இறங்கிச் சென்று அவ் வேலை யாளை நெருங்கி அவன் செய்த தவற்றை எடுத்துக்காட்டி

அதனைச் சீர்திருத்தும் வழியையுங் கற்றுக்கொடுப்பர். நேரிட்ட தவறுகளிற் சில சீர்திருத்த முடியாதனவாகவும், இரண்டு மூன்றாண்டுகளாக அவர் ஒரு செடிக்கோ மரத் திற்கோ உழைத்த உழைப்பின் பயன் அனைத்தையும் ஒருங்கே சிதைத்து விட்டனவாகவும் இருக்கக்கூடும். அவ் வாறு நேர்ந்து விட்டால் பர்பாங்க் மன மிடிந்தவராய், தவறிழைத்த வேலையாளைக் கடிந்துரையாமல், அவனுக் குரிய கூலியைக் கையிற்கொடுத்து வீட்டிற் கனுப்பி விடுவார். தான் இழைத்த தவறென்ன வென்றும், எதற்காகத் தான் வேலையிலிருந்து நீக்கப்பட்டானென் றும் அவன் எப்பொழுதுமே தெரிந்துகொள்ளக் கூடாமலு மிருக்கலாம்.

வேலையாட்களிற் சிலர் களைபிடுங்கிக் கொண் டிருப்பர்; சிலர் மண் போட்டுக் கொண்டிருப்பர்; சிலர் எருவிட்டுக் கொண்டிருப்பர்; சிலர் நீர் பாய்ச்சிக் கொண்டிருப்பர்; சிலர் விதை பொறுக்கிக் கொண்டிருப்பர்; சிலர் கன்றுகளைப் பிடுங்கி நட்டுக் கொண்டிருப்பர். இவ்வாறு நூற்றுக் கணக்கான வகை களில் நூற்றுக் கணக்கான ஆட்கள் வேலைசெய்து கொண்டிருப்பார்கள். அவ்வளவு ஆட்களையும் பர்பாங்க் ஒருவரே ஆட்டிவைத்து வேலைவாங்கி வருவார். அவ் வேலையாட்களும் பர்பாங்கினிடத்தில் வேலை பார்க்க வாய்ப்பு நேர்ந்ததே தாம் செய்த தவப்பேறென்று கருதி, அவரிடம் உண்மை யன்பு பாராட்டி அடக்கமாக நடந்து கொள்வார்கள். தங்கள் தலைவர் செய்யும் வேலை

கள் பெரும்பாலும் செப்பிடுவித்தைகளாகவே அவர்களுக்குத் தோற்றியவாகலின் அவர்மாட்டு அவர்கட் கிருந்த வியப்பும் மதிப்பும் அளவிடப்படாதனவாகும்.

இனி, காலை யுணவருந்தி முடிந்தபின், உடனே செய்துமுடிக்க வேண்டிய வேலையொன்றுந் தோட்டத்திலில்லாம லிருந்தால் தமக்கு வந்துள்ள கடிதங்களுக்கு விடை யெழுத பர்பாங்க உட்காருவார். ஒவ்வொரு கடிதத்தையும் படித்து அதற்கேற்ற விடையைத் தாமே எழுதவேண்டும் என்ற கொள்கையுடையவராதலால், பர்பாங்க் தாமே பல ஆண்டுகள்வரை விடையெழுதி வந்ததுண்டு; ஆனால், அவருடைய வேலையின் வளர்ச்சியும், வருங் கடிதங்களின் எண்ணிக்கையும் சிறிதுங் குறையாமற் பெருகிக் கொண்டே போனமையால், விடை யெழுதும் வேலையைச் சில எழுத்தாளர்களிடம்* ஒப்புவிக்க வேண்டியவரானார். இருந்தாலும், வெளிநாட்டு அறிஞர்கள் பலரிடமிருந்தும் வந்துள்ள கடிதங்களுக்கு இவரேதாம் விடை எழுதித் தீரவேண்டும். முடிமன்னர்கள் சிற்சிலரிடமிருந்தும், முதன்மந்திரிக ளிடமிருந்தும், பெருநிலக் கிழவர்களிடமிருந்தும்† கடிதங்கள் பல வருவதுண்டு. அமெரிக்காவிலுள்ள பல ஊர்களிலிருந்தும், மேக்ஸிகோ‡வி லிருந்தும், தென்னமெரிக்காவிலிருந்தும், இங்கிலாந்து, இந்தியா, ஐரோப்பிய நாடுகள், சீனா, ஜப்பான், ஆஸ்திரேலியா முதலிய இடங்களி

---

* Clerks. † Lords. ‡ Mexico.

லிருந்தும் நாடோறும் கடிதங்கள் வந்து குவியுமானுல் அவருடைய கடிதப் போக்குவரவு எத்துணைத்து என் பதை நாமே ஊகித்துக்கொள்ளலாம்.

இவை யொருபுறமிருக்க, அறச்சாலை நிறுவுவதற் கென்றும், பள்ளிக்கூடங்கள் தொடங்குவதற் கென்றும், கோயில்கள் கட்டுவதற் கென்றும் பொருளுதவி நாடி எழுதப்பட்டு வரும் கடிதங்கள் எண்ணில. அவருடைய தோட்டத்தில் வேலை வேண்டுமென்று அவருக்குப் போ டப்படும் விண்ணப்பங்கள் நாடோறும் எண்ணிற் பெருகி வந்தனவேயன்றிக் குறைவனவாய்க் காணவில்லை. தமக்கு வரும் ஒவ்வொரு கடிதத்திற்கும் விடையெழுதித் தீர வேண்டுமென்ற கொள்கையுடையவரா யிருந்த பர்பாங்க் இவ்வாறு ஓயாமல் வந்து குவிந்து கொண்டிருக்கும் விண்ணப்பங்களுக்குத் தனித்தனி விடையெழுத இயலா தவரானுர். ஆகவே, அவர் தீர ஆலோசித்துப் பொதுப் படையான விடை யொன்றை எழுதி அச்சிட்டு வைத்துக் கொண்டு, வேலைக்கென விண்ணப்பம் போடும் ஒவ் வொருவருக்கும் அதை அனுப்பிவருவாரானுர். அவ் விடை பின்வருமாறு :—

சாந்தரோஸா, காலிஃபோர்னியோ

............189

அன்புள்ள ஐயா,

தாங்கள்——தேதியிட்டு எழுதிய கடிதங் கிடைத்தது. வேலை வேண்டுமென்று பல இடங்களிலுமிருந்து விண்ணப்பங்கள் நாடோறும் வந்து குவிந்து கொண்டிருக்கின்றமையால், நான் தங்கள் கடிதத்திற்கு விடையாக இவ் வச்சிட்ட தாளை அனுப்பவேண்டியவனாக இருக்கின்றேன்; அது கருதி, தங்கள் விண்ணப்பத்தை நான் பொருட்படுத்தவில்லையென்றோ, வந்து குவியும் விண்ணப்பங்களில் பதினாயிரத்திற் கொன்று வீதமாவது வேலை கொடுக்கக்கூடிய வசதி படைத்திருக்கின்றேனென்றோ தாங்கள் பிறழ உணர்ந்து கொள்ளவேண்டாம். நான் அக்கம் பக்கத்தார்களை வேலைக்கு வைத்துக் கொள்வது வழக்கமேயன்றி வெளியூரார்களை அமர்த்திக் கொள்வதில்லை. இப்பொழுது என்னிடம் வேலை செய்து வருபவர்களிற் பலருக்கு நான் தொடர்பாக ஆண்டு முழுவதும் வேலையளிக்க முடியாதவனாக இருக்கிறேன். என்னிடம் விண்ணப்பித்துக் கொள்ளும் யாவருக்கும் வேலை கொடுத்து என்னிடம் அமர்த்திக் கொள்ள முடிந்தால், அதைவிட எனக்குப் பெருமகிழ்ச்சி யளிக்கக்கூடிய தொன்று மிருக்காது. ஒவ்வொருவரும் தம் விருப்பத்திற்கியைந்த வேலையை உடனே பெற வேண்டுமென்றுதான் நான் முழுமனதுடன் விரும்புகிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

லூதர் பர்பாங்க்.

இன்னும் இவருக்கு வந்த சில கடிதங்கள், இவர் செய்துவரும் ஆராய்ச்சியைக் குறித்து உண்மையறியும் நோக்கத்துடன் எழுதப்பட்டனவாகும். விடை கிடைத்தால் மீண்டும் சில கேள்விகளைக் கேட்டு உண்மை யறிய வேண்டுமென்ற அவாவிருப்பதாகவும் அக்கடிதங்களிற் குறிக்கப்பட் டிருப்பதுமுண்டு. அத்தகைய கடிதங்கட்கு விடையாகப் பின்வரும் அச்சிட்ட தாளை அனுப்புமாறு பர்பாங்க் ஏற்பாடு செய்திருந்தார் :—

தாங்கள் கேட்கும் கேள்விகளுக்கு வேறிடத்தில் விடைகிடைக்கக் கூடுமென்று தெரிந்தால் என்னிடம் கேட்கவேண்டாம்.

ஒரு "கார்டில்*" அடங்குவதற்கு மேலும் விரிவான விடைகள் வேண்டுமென்று விரும்பினால், **எப்பொழுதும் ஐந்து டாலர் முன்பணமனுப்புங்கள்.**

வீட்டிற் பார்க்க வருபவர்கள் முன் கூட்டியே எழுதி ஏற்பாடு செய்துகொண்டிருந்தா லொழிய ஐந்து நிமிடங்களுக்குமேல் தங்கக்கூடாது.

ஸெபாஸ்டபோலிலுள்ள ஆய்வுப்புலத்திற்கு ஒருவரும் வரக்கூடாது.

ஒவ்வொருவரையும் உவந்தேற்றுக்கொள்ள இயலுமாயினும், வரும் பெருங்கூட்டத்தினரை ஏற்றவாறு வரவேற்க வேண்டி யிருப்பதால் ஆராய்ச்சிவேலை பெரிதும் தடைபடுகிறது.

* Postal Card.

ஆண்டுதோறும் பர்பாங்க் விடையளிக்க வேண்டிய தாக வந்த கடிதங்களின் எண்ணிக்கை நாற்பதினாயிரத் திற்கு மேலாகுமென்று கணக்கிடப்பட்டுள்ளது. ஒரு முறை, இரண்டு திங்களில் மட்டும் அவருக்கு வந்த கடி தங்கள் பதினையாயிரமாகும்.

இவ்வாறு மட்டற்ற கடிதப்போக்குவர விருந்தமை யால், சில சமயங்களிற் பகலுணவை அவர் ஒரு மணிக் கும், இரண்டு மணிக்கும், மூன்று மணிக்கு மேலுங்கூட உண்ண வேண்டியவராக இருந்தார். பொதுவாக, பர்பாங்க் ஒரு நாளைக்கு இரண்டு வேளைகட்குமேல் உணவு கொள்வதில்லை.

பகலுணவு முடிந்தபின் மீண்டும் கடிதங்கள் எழுத வேண்டியதாக இருப்பினுமிருக்கும். அஃதில்லையானால், அவர் ஆய்வுப்புலத்திற்குச் சென்றுவிடுவார். அங்குப் போய்விட்டாலோ பகலவன் மறைகிறவரையில் ஏதா வது வேலை அவருக்கிருந்துகொண்டேதா னிருக்கும்.

ஆண்டொன்றிற்குக் குறைந்தது ஆறாயிரம் பேர்க ளாவது அவரைப் பார்க்கச் சாந்தரோஸாவிற்கு வரு வார்கள்; ஸைபாஸ்டபோல் ஆய்வுப்புலத்தையும் பார்வையிடலாமென்றுமட்டும் பர்பாங்க் கூறியிருந்தால், இன்னுமோர் ஆறாயிரம் பேருக்குக் குறையாமற் பார்க்க வந்திருப்பார்கள். அங்ஙனம் வருபவர்களை எதற்காக வருகின்றனர் என்று கேட்டால், திட்டமாக இது கருதி யென்று பெரும்பாலும் சொல்ல அறியாதவர்களாய்க் காணப்படுவர்கள். ஆயினும் 'வேறு தனிப்பட்ட கருத்

தொன்றுமில்லை; பர்பாங்க் பெரியாரைப் பார்த்து விட்டுப் போகலாமென்று வந்தோம்' என்ற விடையே பெரும்பான்மை கிடைக்கப்பெறும். இவ்வாறு குறிப் பிட்ட வேலை யேதுமின்றி வாளா பார்த்துவிட்டுச் செல்ல வருபவர்களுக்கு பர்பாங்க் பொதுவாக இடங்கொடுப்ப தில்லை. ஒருசிலரோ, பர்பாங்கின் ஆராய்ச்சியிலும் உழைப்பிலும் உண்மைப்பற்றுடையவர்களாய் அவரை நேரே பார்த்துவிட்டுப் போகலாமென வருவார்கள். வந்த இடத்தில், "அவரை இப்பொழுது பார்க்கமுடி யாது, வேலையாக இருக்கிறார்," என்று வேலைக்காரன் விடையளித்தாற்போதும்; அமைதியுடன் திரும்பி விடு வார்கள். இன்னும் ஒரு சிலரை பர்பாங்க் தாமே பார்க்கவேண்டுமென்று விரும்பி யழைத்திருப்பார். அத்தகையோர்களின் தொகையும் மிகுதியா யிருப்பி னும், வந்தவர்களுடன் குறிப்பிட்ட பொருளைப்பற்றி பர்பாங்க் விரைவிற் பேசிமுடித்து வழியனுப்பிவிடுவார்.

சாந்தரோஸாவின் பின்புறத்தில் அவருடைய சிறிய ஆய்வுப்புலம் இருப்பதாகமுன்னர்க் கூறப்பட்டது. அப் புலத்தினுள் நுழையும் திட்டிவாயிலில் ஒரு பலகை பின் வருமாறு எழுதித் தொங்கவிடப்பட்டிருக்கும்:

ஒன்றும் விலைக்குக் கிடைக்காது. பார்வையிட விரும்புவோர் வீட்டின் வாயிற்புறஞ் செல்லுங்கள்.

வீட்டு வாயிற்புறத்திலோ மற்றொரு பலகை பின்வருமாறு எழுதித் தொங்கவிடப்பட் டிருக்கும் :—

வீட்டிற் பார்க்க வருபவர்கள் முன் கூட்டியே எழுதி ஏற்பாடு செய்துகொண்டிருந்தாலொழிய ஐந்து நிமிடங்கட்குமேல் தங்கக்கூடாது.

இக் கட்டுதிட்டங்களுக் கெல்லாம் உட்பட்டு, ஒருவர் வீட்டினுட் சென்றாலோ, உள்வாயிலினருகே பின்வரும் துண்டுத்தாள் ஒன்று அவருக்குக் கொடுக்கப் படும்.

பார்க்கவருபவரின் எண்..........தேதி..............................
பர்பாங்கைப் பார்க்கவந்த தெதுகருதி ?..........................
....
இச்சந்திப்பினால் யாருக்குப் பயனுண்டு?............................
தங்கள் பெயர்?..
தங்கள் முகவரி*..
தனிக்குறிப்பு..
வீட்டிற் பார்க்கவருபவர்கள் முன்கூட்டியே எழுதி ஏற்பாடு செய்துகொண்டிருந்தாலொழிய ஐந்து நிமிடங்கட்குமேல் தங்கக்கூடாது.
பர்பாங்கின் வேலை எத்தன்மையதென்பதை அறிந்தவர்கள் அவரை வீணே அழைத்துப் பேசி வேலைக் கிடையூறு விளைக்க விரும்பார்கள்.
* Address.

இனி, அவரைப் பார்க்க வருபவர் ஸெபாஸ்டபோல் ஆய்வுப்புலத்தைப் பார்த்துத்தீரவேண்டும் என்பதற்குத் தக்க ஏதுக்கள் காட்டுவாராயின், பின்வரும் துண்டுத்தாள் அவர் கையிற் கொடுக்கப்படும்:—

ஸெபாஸ்டபோலிலுள்ள பர்பாங்க் ஆய்வுப் புலஞ் செல்ல அளிக்கப்படுஞ் சீட்டு

தேதி............

கையெழுத்து..............

பருவகாலமாகிய ஏப்ரல், மே, ஜூன், ஜூலை, ஆகஸ்டு, செப்டம்பர் ஆகிய ஆறு திங்கள்களிலும் பார்வையிட வருபவர்கள் செலுத்த வேண்டிய கட்டணம்:—ஒருவர்க்கு ஒரு மணி நேரத்திற்கு 10 டாலர்கள்; அரை மணி நேரத்திற்கு 5 டாலர்கள்; கால் மணி நேரத்திற்கு 2½ டாலர்கள்.

மற்ற ஆறு திங்கள்களிற் பார்வையிட வருபவர்கள் மேற்குறித்த கட்டணங்களிற் பாதி வீதம் செலுத்தினுற் போதும். இருவரோ, இருவருக்கு மேற்பட்டவர்களோ ஒரே சமயத்திற் பார்வையிட விரும்பினுல், நூற்றுக்கு 25 வீதம் கட்டணக்கழிவு தரப்படும்.

குறிப்பு: ஒவ்வொருவரையும் புலத்தில் உவந்தேற்றுக்கொள்ள இயலுமாயினும், வரும் பெருங்கூட்டத்தினரை ஏற்றவாறு வரவேற்க வேண்டியிருப்பதால் ஆராய்ச்சிவேலை பெரிதும் தடைபடுகிறது.

பர்பாங்க் இவ்வாறு கட்டணம் ஏற்படுத்தியது இவ் வழியிற் பொருள் தொகுப்பதற்காகவே என்று கருதி விடக்கூடாது. வீண்காலக்கழிவையும் உடலுழைப் பையும் தடுப்பதற்காகவே அவர் இவ்வேற்பாடுகளைச் செய்து வைத்தார்.

சில வேளைகளில், பர்பாங்க் காலை ஒன்பது மணிக்கே சாந்தரோஸாவை விட்டுப் புறப்பட்டு வண்டியிலேறி எட்டுக்கல் தொலைவிலிருந்த ஸெபாஸ்டபோலிற்குப் போய்விடுவார். சாந்தரோஸா புலத்தில் வேலை செய் பவர்களின் எண்ணிக்கையைவிட இங்கு வேலை செய் வோரின் எண்ணிக்கை பெரியதாகும். புலத்தை ஒரு முறை சுற்றி வருவதென்றாலும் பல மணி நேரங்கள் பிடிக்கும். நூறாயிரக்கணக்கான பலவகைப்பட்ட மரங் களுஞ் செடிகளும் தகுந்த மேற்பார்வையில் அங்கு வளர்ந்து வரும். பூம்பண்ணைகள் மட்டும் எழுநூறு அடி, எண்ணூறு அடி அளவிற்கு வகுக்கப்பட்டிருக்கும். ஒரு முறை அங்குச் சென்று வந்தாரானால் பர்பாங்க் மிகுதி யுங் களைத்து அயர்ந்துவிடுவார் என்பதில் வியப்பொன்று மில்லை.

களைத்துத் திரும்பி வந்து படுக்கையிற் சுருட்டி மடக்கிக்கொண்டு அவர் படுத்துக்கொள்வார். ஒரு மணி நேரமாவது அவ்வாறே மிகவும் அயர்ந்த நிலையில் படுத்திருப்பார். படுத்திருந்தாலும் அவர் தூங்குவ தில்லை. அவர் மூளை ஓயாமல் வேலை செய்துகொண்டே யிருக்குமாதலால் அவருக்கு அப்பொழுது தூக்கம்

பிடிப்பதில்லை. இவ்வாறு அலுத்துக் களைத்துப் படுத்திருக்கும்போது கூடச் சில சமயங்களில், உடனே பார்த்து விடையளிப்பதற்கெனச் சடுதிக் கடிதங்களும்* தந்திகளும் வருவதுண்டு.

நிறுத்தமுடியாத வேலை ஏதாவது இருந்தாலொழிய பர்பாங்க் இரவு ஒன்பதடித்தவுடன் படுக்கைக்குச் சென்றுவிடுவார். அவர் ஒவ்வொரு நாளையும் கழிப்பது இவ்வாறே.

---

* Express Letters.

சு. பர்பாங்கின் பண்பு நலங்கள்

பர்பாங்க் எப்பொழுதுமே மெலிந்த உடலமைப்புடையவர். உருவில் மெலிந்து தோன்றினாலும், அவர் நல்ல உடற்கட்டு வாய்ந்தவர்; கம்பியைப் போன்று நரம்புவலுப் பெற்றவர்; வயது முதிர்ந்தாலும் உடல் முதிராதவர். அவருடைய நீனிறக்கண்கள் ஆழ்ந்தகன்று, உள்ளக்கருத்தைத் தெள்ளிதிலுணர்த்துவனவா யமைந்திருந்தன. எப்பொழுதும் அவர் வெயிலிலேயே வேலை செய்து வந்தமையால், உடலின் நிறம் ஒருசிறிது கறுத்திருந்தது. அவருடைய முகத்தை நோக்குவோர்க்கு அவர் ஒரு புலவரோ, அன்றி, தத்துவ ஆராய்ச்சிக்காரரோ, உலகியலறிஞரோ, அன்றி உண்மைஞானியர் தாமோ என்ற எண்ணமே தோற்றும்.

பர்பாங்க் மிக்க சுருசுருப்புள்ளவர்; இன்சொல்லாடுபவர்; தாம் பேசி ஒன்றை விளக்குவதை விடப் பிறர் பேசக் கேட்டு உண்மையறிய வேண்டுமென்ற அவாவுடையவர்; ஆனால், பேசத் தொடங்கி விட்டாலோ, தங்கு தடையின்றி விரைவாகவும், தெளிவாகவும் பொருட்செறிவுடனும் பேசவல்லவர். மிகுந்த உணர்ச்சியுடன் பேசுங் காலத்தில் அவர் கைகளைத் தட்டியும், அறைந்தும், ஆட்டியும் பேசுவார்; வழக்கில் வெற்றி பெறுவதற்கென்று பொய் பேசியறியாதவர். தாம் ஆராயுந்துறையிற் கண்ட உண்மைகளை எடுத்துப்பேச நேர்ந்தால் அவர் மிகவும் உருக்கமாகவும் கிளர்ச்சியுடனும் பேசுவார்; இடையிடையே

தாம் ஆராய்ச்சித்துறையிற் செய்த தவறுகளைக் குறித்துச் சொல்ல வேண்டியதாக நேர்ந்தாலும், ஒளிப்பு மறைப்புக்களின்றி அவற்றையுங்கூறி ஒப்புக்கொள்வார்; நண்பர்களுடன் பேசினாலும் அறிஞர்களுடன் வழக்காடினாலும், ஒன்றிலும் விட்டுக்கொடுக்காதபடி, சொல்லுக்குச் சொல் உடனுக்குடன் கூறிவிடுவார்; பிறர் மனம் புண்படப் பேசி அறியார்; கேட்போர் மகிழ்வுறுமாறு இடையிடையே நகைச்சுவை பயக்கவும் பேசுவார். பிறரைப் பற்றிப் புகழ்ந்துரைக்க நேர்ந்தால் அவர் உளமாரப் புகழ்வார்.

பர்பாங்க் அருள் சுரக்கும் ஈரநெஞ்சத்தினர். பிறர் துயர்க்கடலிடைப்பட்டுழலக்கண்டால் கண்டவப்பொழுதே இரக்கமென்னும் புணையை அவரிடஞ் செலுத்துபவர். பொழுதுபோக்குக்காக வெளியில் உலாவிவர வேண்டுமென்று கருதினல், அவர் அவ்வூரிலுள்ள சிறுவர்களில் எவரொருவரையேனும் உடனழைத்துக் கொண்டு உலாவுவதையே பெரிதும் விரும்புவார். சிறுர்கள் மாட்டு அவருக்கிருந்த உளங் கொளாப் பற்று, பின்குறிக்கப்படும் நிகழ்ச்சியால் நன்கு விளங்கும்:

சான்ஃபிரான்ஸிஸ்கோவின் அருகிலுள்ள ஒரு நகரத்திலிருந்த செல்வந்தரொருவரின் குழந்தை யொன்று இறந்துவிட்டது. அது கருதி, அச்செல்வர் இறந்த அக்குழந்தையின் நினைவுக்குறியாக ஒரு பெரிய நந்தவனத்தை வாங்கி, அதனைக் குழந்தைகள் விளையாடும் பொதுவிடமாக விடுவதென்று முடிவுசெய்து, அத்

திறப்புவிழாவிற்குத் தலைமை தாங்க, பர்பாங்கை அழைத்திருந்தார். பர்பாங்க் அதனை ஆர்வத்துடன் ஒப்புக்கொண்டு திறப்புரை நிகழ்த்தியதில் ஒருபகுதி மொழி பெயர்த்துக் கீழே தரப்படுகின்றது:

"ஞாயிற்றின் ஒளி, நீனிற வானம், மரங்கள், மலர்கள், மலைகள், பசும்புல்வெளிகள், சிற்றோடைகள், கொந்தளிப்பின்றி மென்மையாகக் கரையில் வந்து புரண்டோடும் அலைகளையுடைய நீர்நிலைகள், ஓவென்றலறி அடித்து மோதிப் பாறைகளைத் தகர்த்தெறியும் பேரலைகளைக்கொண்ட கடல், வயற்பறவைகள், நீர்வீழ்ச்சிகள், வானவில், வைகறை, நண்பகல், மாலைக்காலம் ஆகிய எல்லாவற்றையுமே என் உள்ளம் அவாவுகிறது. ஆனாலும் இவை யாவற்றையும்விடக் குழந்தைகளையே நான் பெரிதும் விரும்புகிறேன். மரங்கள், செடிகள், மலர்கள் ஆகிய இவையெல்லாம் நமக்கு நல்ல படிப்பினைகளை நல்கி நல்லாற்றினுய்ப்பனவே; அவை எப்பொழுதும் நமக்கு மகிழ்ச்சியை யளித்து நலமே புரிந்து வருகின்றன. நன்றாக வளர்ந்த பின்னும் அவை நம்முடைய அரவணைப்பையே நாடி நிற்கின்றன, நாம் காட்டும் அரவணைப்பிற்கேற்றவாறு அவையும் ஆர்வங்கொண் டணைகின்றன. எனினும், இவ்வுலகத்திலேயே குழந்தைகளை யொத்த நன்னலம் வாய்ந்த தெதுவுமேயில்லை. உணர்ச்சியும் கிளர்ச்சியும் பொருந்தி, ஒண்முகமும் குறுநகையும் கண்ணீருங் கம்பலையும் ஒருங்கே காட்டி இன்பளிப்பன குழந்தைகளே!"

உள்ளத்தை உருக்கும் இவ்வுரை குழந்தைகள் மாட்டு பர்பாங்கிற்கிருந்த கரைகொளா அன்பையும், அகத்தெழுங் கருத்துக்களை அழகுற எடுத்துக் காட்டும் பேராற்றலையும் விளக்கிநிற்பதொன் ருகும்.

மிதமிஞ்சிய அழகைப் படைத்துள்ள ஓரியற்கைத் தோற்றத்தைக் கண்டால் பர்பாங்க் வாய்திறந்தொன் றுங் கூருது உள்ளூற மகிழ்ச்சியுறும் பண்பு வாய்ந்தவர். ஒரு முறை யோஸ்மைட் பள்ளத்தாக்கின்* எழிலுறு வனப்பை முதன்முதற் கண்டபோது, அவர் அங்கு நின்றபடியே கண்களில் மகிழ்ச்சிக் கண்ணீர் துளிக்க அகமகிழ்ந்திருந்தாராம்.

கடமையை அன்புடன் செய்வதிலும் சற்றும் பின் வாங்காதவர் பர்பாங்க். காலையிலெழுந்தவுடன் முதன் முதலாகத் தம் தாயாரருகிற் சென்று வணக்கங்கூறிய பிறகுதான் வேறு வேலைசெய்யத் தொடங்குவார்; படுக் கைக்குச் செல்லு முன்னரும் தாய்க்கு வணக்கஞ் செலுத் திய பின்பேதான் படுத்துறங்கச் செல்வார். அவருடைய தாயார் ஏறக்குறைய நூறு வயதளவும் உயிர்வாழ்ந்திருந் தார் என்பதையும், அவரிறக்கும் வரையிலும் தம்மிடம் அவர் தங்கியிருந்த காலத்திலெல்லாம் தவருமல் பர்பாங்க் இக் கடமையைச்செய்து வந்தாரென்பதையும் நோக்கின், அவர்தம் பிள்ளைமையன்பின் பெற்றி நனி சிறந்து விளங்கும்.

---

* Yosemite Valley.

உளத்தெழுங் கருத்தைச் சொற்சுருக்கத்துடனும் பொருட் செறிவுடனும் எடுத்துக்கூறுவதில் பர்பாங்க் பெரு விருப்புடையவர். அவர் அவ்வாறு கூறியவற்றிலிருந்து பொறுக்கித் தரப்படுஞ் சில தொடர்களினுல் அவருடைய உலகியலறிவும் சொல்வன்மையும் நன்கு விளங்கும்:

"பெறுங்கூலி கருதிப் பெருந்தொண்
டாற்றியவன் எவனுமில்லை"

"அறியாமை யொன்றே உய்தியிற் குற்றமாம்"

"வெட்டிச் சொல்ல வேண்டுமிடத்து வெட்டிச்
சொல்லாதவனுக்கு, உண்மையில், ஒட்டிச்
சொல்லுஞ் சமயம் வாய்ப்பதரிது"

"உலகின்புறக் காண்டல் பெறும் பேரின்பம்;
அதன் பின்னது உலகு சிந்தித்துநிற்கக்
காண்டலேயாம்'

தாம் உணவு கொள்ளும் அறையில் தம் இருக்கைக்கு நேராக, எமர்ஸன் என்பாரின் பின்வரும் கூற்றுக்களை பர்பாங்க் ஓர் அட்டையில் எழுதி மாட்டி வைக்கச்செய்திருந்தார்:—

"ஒவ்வொருநாளும் சிறந்த நாள் என்று
உன் உள்ளத்தில் எழுதி வைத்துக்கொள்

....

ஒவ்வொரு நாளும் தீர்ப்புநாள் என்பதை
உணர்ந்தாலொழிய எவனும் உண்மைக்

கல்வி பயின்றவனுகான் ....
இந்நாள் என்பது மாற்றுடை யணிந்த
ஓரரசன். வெறும்பொழுதென்று அறி
யாமற் கழித் தொதுக்கப்படுகிற நாட்களி
லும் பெருமை யளிக்குஞ் செயல்களும்
மகிழ்ச்சியளிக்குஞ் செயல்களும் உருப்
பெறுகின்றன என்பது உலகியலோர்
ஒப்புக்கொண்ட ஒரு மாற்றமுடியாத
உண்மையாகும். இவ்வுண்மை காண முடி
யாதவர்களுக்கே இந்நாள் என்ற ஒவ்
வொரு நாளும் வெறு நாளாகத் தோற்
றும். எனவே, நாமும் அவ்வாறு நம்பி
ஏமாறுமல், அவ்வரசனுடைய மாற்றுடை
யைக் களைந்து உண்மையரசனைக் காணல்
வேண்டும்.

இத்தகைய சிறந்த கருத்துக்களும் கொள்கைகளும் இருந்தாலன்றி, பர்பாங்க் தாம் செய்து முடித்த அளவிற்கு அரும்பெருஞ் செயல்களைச் செய்து காட்டி யிருத்தல் முடியாது. மேலும், அழகென்ற ஒன்றிலேயே அகமும் புறமும் ஈடுபட்டிருந்தாலல்லது தாம் செய்து முடித்த வளவிற்கு பர்பாங்க் உலகை அழகு பெறுமாறு செய்திருத்தல் இயலாது. எனவே, எல்லாவற்றையும் நோக்குங்கால் அவரையொத்த ஆற்றல் வாய்ந்த ஒரு நன்மகனை இனிக் காண்ப தரிதென்றே கூறல்வேண்டும்.

எ. பின்னுரை

உண்மையிற் பாடுபடுவோர் ஒருவரை உலகத்தார் உடனே தேர்ந்து போற்றுவது அரிதினும் அரிது. பெரும்பாலும் அவரிறந்த பின்னரோ அல்லது மிகவுங் காலந் தாழ்த்தோதான் மக்கள் போற்ற முன்வருவார்கள். உண்மையிவ்வாறிருக்க, ஒருசிறிதும் தம்மைப்பற்றி விளம்பரப்படுத்திக் கொள்ள விரும்பாத பர்பாங்கின் உழைப்பின் றிறத்தை வியந்து உலகத்தார் விரைந்து பாராட்டிவிடுவார்கள் என்று கொள்ளவுங் கூடுமோ! எனவே மிகுதியுங் காலந்தாழ்த்தே உலகப்பாராட்டு பர்பாங்கை நாடி வந்தது; அஃதாவது, அவர் தாம் மேற்கொண்ட பணியில் நாற்பது ஆண்டுகளுக்குமேல் அரும்பாடுபட்டு உழைத்து வந்த பின்னரே, அவருடைய 54-வது ஆண்டில், அவர் பெருமையை உலகோர் உணரலானார்கள். அதற்கறிகுறியாக முதற் பாராட்டு மிகவுஞ் சிறப்பாக நிகழ்ந்தது. 1903-ஆம் ஆண்டு மேத் திங்கள் காலிஃபோர்னியா அறிவியலாராய்ச்சிக் கழகத்தார்* தம் கழகத்தின் ஐம்பதாம் ஆண்டுநிறைவு விழா கருதி, பர்பாங்குக்கு ஒரு பொற்பதக்கம் அளிக்க முன்வந்தனர். அப்பதக்கத்தின் முற்புறத்தில்,

* California Academy of Sciences.

மரஞ்செடிவகைகளிற் புதிய இனங்களை வளர்த்த அறப்பெருஞ் செயலை வியந்து, இது காலிஃபோர்னியா அறிவியலாராய்ச்சிக்கழகத்தாரால், லூதர் பர்பாங்கிற்கு 1903 மே 18-ஆம் நாள் அளிக்கப்பட்டது.

அதன் மற்றொருபுறத்தில் தோப்புறை மகளும், துணருறை மகளும்* ஒரிளைஞனுக்கு மலர்மாலை சூட்டுவதாக ஓர் அழகிய சித்திரம் பொறிக்கப்பட் டிருந்தது. இவ்வாறு இக்கழகத்தாரால் போற்றப்பட்ட பின்னர் தான், முற்கூறியவாறு கார்னீஜி அறநிலையத்தார் நன்கொடை அளிக்க முன்வந்ததாகும். அதன்பின் பற்பல உலகப் பெருஞ் சந்தைகளிலும், கண்காட்சிகளிலும் பர்பாங்கின் திறமை புகழ்ந்து பாராட்டப்பட்டது. "யுனைட்டெட் ஸ்டேட்ஸ் - கானடா செடி - விலங்கு வளர்ப்புக் கழகத்தா" † ரின் புகழுறுப்பினர் ‡ பதின்மர்களில் ஒருவராகத் தேர்ந்து கொள்ளப்பட்டார். நாட்டிலுள்ள பல அறிவியற் கழகங்களின் செயலுறுப்பினராகவுந் தேர்ந்து கொள்ளப்பட்டார்.

இதன்பின், நியூயார்க் பகுத்துணர்வுச் சங்க§த்தினரால் சங்க உறுப்பினராக உவந்தேற்றுக் கொள்ளப்பட்டார்; டஃப்ட்ஸ் கல்லூரியார்$ அவருக்கு அறிவியல் மருத்துவர்||

* Goddesses Pomona and Flora.

† Plant and Animal Breeders' Association of the United States and Canada. ‡ Honorary Members.

§ Freethinker's Society of New York. $ Tufts College.

|| Doctor of Sciences.

என்ற பட்டமளித்தனர். டட்ச்* நாட்டு மரநூற் பேரறிஞரான ஹ்யூகோ டி விரீஸ்† என்பாரும், உலகப்பேரறிஞர்களில் ஒருவரான தாமஸ் ஆல்வா எடிசனும்‡ பர்பாங்கிற்கு உற்ற நண்பர்களானார்கள். லிலாண்டு ஸ்டான்ஃபோர்டு பல்கலைக் சழகத்தில்§ மரஞ்செடி வளர்ச்சி நெறிச் சொற்பொழிவாளராக|| அவர் அமர்த்தப்பட்டார்.

தம் பெயரால் 1914-15 ல் லூதர் பர்பாங்க் ஒரு நூலெழுதி வெளியிட்டார்; அதன் பெயர் லூதர் பர்பாங்க், அவர் முறைகளும், கண்டுபிடித்தவைகளும்$. அதன்பின், 1921 ஆம் ஆண்டில் மக்களுக்குப் பணிசெய்யுமாறு மரஞ்செடிகளைப் பழக்குவதெப்படி?** என்னும் மற்றொரு நூலை எழுதி வெளியிட்டார்; 1927 ல் வில்பர் ஹால் †† என்பவருடன் சேர்ந்து ஆண்டுகளின் அறுவடை ‡‡ என்ற ஒப்பரிய பெரு நூலை வெளியிட்டார்.

செயற்கரிய செய்த இப்பெரியார் 1926 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் பதினோராம் நாள் இவ்வுலக வாழ்வை நீத்தார். மண்ணும் அழுதது; மரமும் அழுதது; செடியும் அழுதது; கொடியும் அழுதது; மக்கள் அரற்றினர்; மாக்கள் கதறின; நண்பரும் நொதுமலரும் உளமிக நைந்தனர். அப்பெரியாரின் நினைவு மற

* Dutch. † Hugo de Vries. ‡ Thomas Alva Edison. § Leland Stanford University. || Lecturer on Scientific Plant Evolution.

$ Luther Burbank, His Methods and Discoveries.

** How plants are trained to work for Man.

†† Wilbur Hall. ‡‡ The Harvest of Years.

வாதபடி அவருடைய கெழுதகை நண்பரான ஜோஸெஃப் லூயி * என்பார் 1927 ஆம் ஆண்டில் ஒரு பெரிய கூட்டங்கூட்டி அவருடைய கல்லறையினருகில், அவர் கைகளாலேயே பயிர்செய்யப்பட்ட ஒரு மரத்தைப் பெயர்த்துக்கொண்டுவந்து நட்டுவைத்தார்.

லூதர் பர்பாங்கின் அருமை பெருமைகளைக் குறித்து "நியூஸ்" † என்னும் நியூ ஜெர்ஸி ‡ புதினத்தாள் § எழுதிய கட்டுரையின் ஒரு பகுதி இங்குத் தரப்படுகிறது.

"லூதர் பர்பாங்க் என்பவரைப்பற்றி அண்மைக் காலம் வரையில் பலர் கேட்டறியாமலிருக்கலாம். இயற்கையிலும் செயற்கையிலும் நாகரிக வளர்ச்சிகருதி அவரியற்றியுள்ள அரும்பெருஞ் செயல்களுக்கீடாக இக்காலத்திலும் இதற்கு முன்னரும் விளங்கிய எப்பேரறிஞருடைய செயல்களையுங் கூறமுடியாது. எவரும் இதுவரையில் செய்து முடிக்காத வகையில், புதிய செடிகளையும், பழங்களையும், புற்களையும், மரங்களையும், மலர்களையும் உண்டுபண்ணியிருக்கிறார். வரையறுப் பின்றியும் எதிர்ச்சையாகவும் செயலாற்றுவோரைப்போலல்லாமல், பர்பாங்க முதலிலிருந்தே ஒரு குறிக்கோளை வகுத்துக்கொண்டு தாம் செய்யும் ஒவ்வொன்றையும் அதைச் செய்துமுடிக்கும்வகையி லாற்றுப்படுத்தி, தெளிந்த அறிவோடும் ஆராய்ச்சியோடும் மாபெரும் அளவிற்றாயச் செய்துமுடித்திருக்கிறார். மக்கட்டோற்றத்தில் எல்லாம்

---

* Joseph Lewis. † News. ‡ New Jersey.
Newspaper.

வல்ல சித்தரோ இவர் என்று ஐயுறுமாறு மற்றெவ் வறிஞரையும்விடச் சிறந்து விளங்குகிறார்............நாகரிக வுலகின் நாற்புறங்களிலும் அவருடைய புகழ் இன்று பரவி யிருக்கிறது. அவர் தெள்ளத் தெளியக் காட்டி யுள்ள வழியைப் பின்பற்றி நூற்றுக் கணக்கான ஆராய்ச்சியாளர்கள் இப்பொழுது உழைத்து வருகின் றார்களென்பது திண்ணம்; எனவே, இவரால் இயக்கப் பட்டுக் கடுவிரைவுடன் சென்றுகொண்டிருக்கும் இவ் வறிவிய லியக்கத்தால் விளையவிருக்கும் நற்பயன் இத் துணைத்து என்று இக்காலை அறுதியிட்டுக் கூறமுடியாது. எத்துணையவாய பயன்கள் விளைந்தாலும், அத்துணைப் பயன்களும் அவற்றிற்குத் தந்தையாயிருந்த லூதர் பர்பாங்கின் ஒளிவட்டத்தைப் பேரொளியுடன் விளங்கச் செய்யும் என்று துணிந்து கூறலாம். மக்களுக்கு நல மிழைத்த பெரியாரினத்தில் லூதர் பர்பாங்க் தலைசிறந்து விளங்குகிறார் 'என்று கூறுதல் மிகையாமோ? பகலவ னொளியும், காற்றும், மண்ணும் அறிவியற்றுறையிற் பணி செய்து வருகிற காலம்வரையில் அவர் நற்புகழ் மாறவே மாறாது''.

3187

பர்பாங்க் நினைவுவிழாக் கொண்டாட்டம்

லூதர் பர்பாங்க்

[ஈடித் டாலீ* எழுதியது]

உலகி லொப்பிலாத் தண்ணளி வாய்ந்த
தகைமை யாளர் தலைசாய்ந் திட்டார்—
எல்லையில் பரிவைக் காட்டிய துணர்ந்தே
எழிலா ரியற்கை ஏற்றன ளவரை
†ஓலைநா யகனாய்; ஒளிமுடி சூட்டினள்.
ஒளிமுடி யொன்று கொல்!
மக்கண் மாய்க்கும் பேரவா ஒழித்து
மாணுயர் அன்பை மனமுவந் தளித்தனள்.
எத்தகை யன்பு!
கண்கள் துளித்துக் காரிருள் கவ்வ
புண்கொள் நெஞ்சம் புலம்பி யலமர
செறிசவப் பெட்டியுள் விரிமலர்ப் பாயல்
பரிமள மிகுத்துப் படரா றி வித்தது!
வாழ்வின் அமைதியே (அவர்) சாவிலுங் கண்டோம்.
மரக்கிளை யுச்சியும் மணங்கமழ் பூக்களும்
பசும்புற் றரையும் பாங்கர்ச் சூழ்ந்து
உற்றதுணர்ந்து உயிரது வெதும்பி
ஒடுங்கிய குரலிற் "போய்வரு" கென்றன.
துயர்கொடு சாய்மலர் நடுவண் துவன்றி
துணையிழந் தயரும் துனிகொ ளன்பர்
"நண்ப"—என் றியற்கை மெல்லென நவில்வதை
நலமுடன் கேட்கும் நற்பே றெய்தினர்.

இது லூதர் பர்பாங்க் நினைவுவிழாவன்று திருமதி. ஜோஸெஃப் லூயி அம்மையாரால் படிக்கப்பட்ட ஆங்கிலச் செய்யுளின் கருத்தாகும்.

---

* Edith Daley. † Interpreter.

Cable Address "Edison, New York"

From the Laboratory of Thomas A. Edison,

Orange, N.J.

January
twenty-fifth
1930

Mr. Joseph Lewis,
250 West 54th St.,
New York City.

My dear Mr. Lewis:

It was a cause of much regret to me that I found it impossible to carry out my part of your programme by planting a tree in Central Park in memory of my greatly esteemed friend, Luther Burbank..

It was indeed a most fitting manner of perpetuating the memory of one whose every thought and heart-thob had their inspiration in the glorious beauties of Nature. Being a sincere admirer of this supremely simple but wonderful man and his achievements, I regarded it as a great privilege to have spent some little time with Mr. Burbank at his home in Santa Rosa a few years ago.

Despite his unaffected bearing and simplicity of manner one could not help but feel that here was a Master in his own chosen field, and thus I found him.

I am rejoiced that he accepted me as a friend.

Yours very truly,

Thos A Edison

Wmiphoned-C

தந்தி: 'எடிசன் நியூயார்க்,

தாமஸ் ஆ. எடிசன்

ஆய்வுக்களம்

ஆரஞ்சு என். ஜே.
ஜனவரி
இருபத்தைந்து
1930

திரு. ஜோஸெஃப் லூயி,
250. மேல 54-வது தெரு
நியூயார்க் ஸிட்டி.

என்னருமைத் திரு. லூயி:

பெருமதிப்பிற்குரிய என் நண்பர் **லூதர் பர்பாங்க்** என்பாரின் நினைவு கருதித் தாங்கள் எடுக்கும் விழாத் திட்டத்தில் **ஸென்ட்ரல் பார்க்** என்னும் மையமலர்ச்சோலையில் ஒரு மரத்தை நடுவதென எனக்கு விதித்துள்ள பணியை நான் மேற்கொண்டு வந்து செய்ய இயலாமைக்கு மிகவும் வருந்துகிறேன்.

தம் அகத்திடை எழும் ஒவ்வொரு கருத்தும், நெஞ்சிடைத் துடிக்கும் ஒவ்வொரு துடிப்பும் இயற்கையின் பேரெழிலிலேயே ஈடுபட்டுத் தூண்டுதலுறும் பெற்றிவாய்ந்த ஒருவரின் நினைவை நிலைநிறுத்துவதற்கு, உண்மையில், ஏற்ற, தகுதியான முறை அதுவேயாகும். ஆடம்பரமற்ற எளிமைப் பண்பும், ஆனால் விந்தைப் பேராற்றலும் ஒருங்கே வாய்ந்த இப் பெரியாரையும், அவர்தம் வெற்றிச் செயல்களையும் நெஞ்சாரப் போற்றி வந்தவனாகிய யான், சாந்தரோஸாவிலுள்ள அவருடைய வீட்டில் சில ஆண்டுகட்குமுன் தங்கி அவருடன் ஒரு சிறுபொழுது கழிக்க நேர்ந்ததைப் பெரியதொரு தனிப் பேறாகவே மதித்துள்ளேன்.

பெருமையற்றதும் எளிமையோடு கூடியதுமான ஒழுகலாறுடையவரா யிருந்தாலும், தாம் தேர்ந்து கொண்ட ஒரு துறையில் அவர் தலைமையாளரே என்பதை எவரும் உணர்ந்தே தீர்வர்; அற்றே யானும் அவரைக்கண்டு உணர்ந்தேன்.

என்னை ஒரு நண்பனாக அவர் ஏற்றுக்கொண்டதே எனக்குப் பெருமகிழ்வை யளிக்கின்றது.

தங்கள் உண்மையுள்ள,
தாமஸ். ஆ. எடிசன்.

டேவிட்ஸ்டார் ஜார்டன்.
ஸ்டான்ஃபோர்டு யூனிவர்ஸிட்டி (பி. ஓ.)
காலிஃபோர்னியா.
மே, 12., 1927.

திரு. ஜோஸெஃப் லூயி
250, மேல 54-வது தெரு,
நியூயார்க் ஸிட்டி.

அருமைத் திரு. லூயி,

பர்பாங்கின் நினைவுவிழாவன்று நான் வந்து உடனிருக்க முடியாமைக்குப் பெரிதும் வருந்துகிறேன். மக்கள் வாழ்வின் மகிழ்ச்சியையும் வளமையையும் கண்கூடாகப் பெருக்கிக் காட்டியவரும், பழைய மூடநம்பிக்கைகளாகிய கட்டினின்றும் மக்களுணர்வை விடுவித்தலாகிய பெருந்தொண்டிற் குதவியவருமாகிய ஒருவரின் நினைவை நிலைநிறுத்துதற்குத் தாங்கள் வகுத்துள்ள திட்டமே மிகவும் ஏற்றதொன்றாகும்.

தங்கள் உண்மையுள்ள,
ஹாரி எல்மர் பார்ன்ஸ்.

108, மேனர்டு ரோடு,
நார்தாம்டன்,
மாஸ்.
மே, 13, 1927.

அருமைத் திரு. லூயி,

என் நண்பர் லூதர் பர்பாங்கின் நினைவு கருதி ஸென்ட்ரல் பார்க் என்னும் மையமலர்ச்சோலையில், மரத்தைத் திரு. எடிசன் நடுங்காலைத் தங்களுடன் வந்திருந்து காண இயலாமைக்கு வருந்துகிறேன். ஆனாலும், இம் மரத்தைச் சுற்றிக் கூடும் கூட்ட நிகழ்ச்சிகள் வெற்றியுடன் நடந்தேற வேண்டுகிறேன்; (இதனால்) காலிஃபோர்னியாவில் குறைந்தது ஒரு நூற்றாண் டளவேனும் பர்பாங்கின் நினைவுமறவாமலிருக்கப் போவதுபோல, நியூயார்க்கிலும் அந்நினைவு மறவாமல் நிலவியிருக்கச் செய்தல் கூடும் என நம்புகிறேன்.

தங்கள் உண்மையுள்ள,
டேவிட் ஸ்டார் ஜார்டன்.



ஜோஸெஃப் லூயி பர்பாங்க் நினைவுவிழா அறிக்கை படித்தல்;
அவர் அருகில் தெரிவது பர்பாங்கின் உருவச்சிலை.

பக்கம் ௬௫

1927 ஆம் ஆண்டு மேத்திங்கள் இருபத்தி ரண்டாம் நாள், நியூயார்க் ஸிட்டி மையமலர்ச் சோலையில், நியூயார்க் பகுத்துணர்வுக் கழகத்தின ரின் சார்பாக, கழக உறுப்பினர்களில் ஒருவரும் முதற் பிணைத்தலைவருமாகிய லூதர் பர்பாங்க் என் பாரின் நினைவு கருதி, எடுக்கப்பட்ட மரநாட்டு நினைவு விழாவின்போது ஜோஸெஃப் லூயி என்பாரால் படிக்கப்பட்ட நினைவறிக்கையின் மொழிபெயர்ப்பு.*

1926ஆம் ஆண்டு எப்ரல் திங்கள் பதினோராம் நாள் லூதர் பர்பாங்க் இறந்தார்.

அவருடைய இறப்பு அவருடைய குடும்பத்தினரை யும் நண்பர்களையுமே யன்றி இந்நாடு முழுவதையுமே துயர்க்கடலிற் புகுத்திவிட்டது; ஏன்? உலகத்திலுள்ள நாகரிகமுற்ற மக்கட்டொகுதி அனைத்தையுமே துயருறச் செய்து விட்டதென்றே கூறலாம்.

மக்களினத்திற்கு மகிழ்வை யூட்டிய ஒரு பெரு மகனார் பிரிந்தார்; அறிவுக்கடலின் கரையை அகற்றிய ஓரறிஞர் அகன்றார்; உயிருடனிருந்த வரையில் உல கின்புறுமாறே உழைத்துவந்த ஒருயர்ந்தோர் உயிர்நீத் தார்; உலகமே பெரும்பட்டுருழந்தது.

---

* Address delivered by Joseph Lewis on May 22, 1927 in Central Park, New York City, at the Tree Planting Memorial Exercises conducted by the Freethinkers' Society of New York, in honour of Luther Burbank, who was a member and First Honorary Vice-President.

லூதர் பர்பாங்க் ஆருயிர் படைத்த ஓரருமைத் திரு மகனார்; பிறர்க்கு என்புமுரிய அன்பு வாய்ந்த அந்தணர். உலகீன்ற உயர்பண்பு வாய்ந்த அச்சீரியரின் பிரிவால் உலகம் ஈடில்லாப் பேரிழப்பு எய்திற்று.

கட்டெதிலு மடங்காது விடுபெற்ற தனிச் சிறப்பு வாய்ந்த அவர்தம் கருதுமாற்றல் ஒன்றிற்கே லூதர் பர்-பாங்க் நம்முடைய நன்மதிப்பிற் குரியராவர்; எனினும், அஃதொன்று மட்டிலுமன்றி, அவர் அறிவியற்றுறையில் அடைந்துள்ள வெற்றிகள் கருதியும், இயற்கையாம் அன்னைக்கு எழில்பெறப் பூட்டிய அணிகள் கருதியும் நாம் இன்று அவரை மறவாது நினைவு கூரவேண்டியவரா வோம்.

இயற்கையின் கேள்வராகிய இவருக்குக் கல்லும் பளிங்குங் கவின்பெறும் நடுகல்லாமாறு இல்லை; ஆகவே, அவர் நினைவுகருதி ஒரு மரத்தையே நடுகின்றோம். அதுவே அவருடைய வாழ்க்கையையும், வாழ்நாட் பணியையும் நன்கு குறிப்பதாகும்.

மரங்களுஞ் செடிகளும் மலர்களுமே அவர்தம் அன்பிற் குகந்த உறவினர். நாம் மக்கள்மீது அன்பு கொள்வதையொத்து அவர் அவற்றினிடம் பேரன்பு கொண்டிருந்தார். அவற்றின் உயிரோடு உயிராய்ப் பிணைந்து அவற்றின் உடன்பிறந்தவராகவே அவர் தம்மைக் கருதினார். எனவே, அவற்றோடு மிகவும் நெருங்கிய உறவு கொண்டாடுவாராயினர்; செடி கொடிகளின் உள்ளங்

களைத் துருவியாராயும் ஆற்றலையும், மலர்களோடு பேசிக் கருத்தறிவிக்கும் ஆற்றலையுங் கற்றுக்கொண்டார். மலரினத்தின் மறைவு நுட்பங்களை வியக்கத் தக்கவாறு இவரறிந்துவந்த ஆற்றலைக் கண்டோர், இவரைச் "செடி கொடிச் சித்தர்*" என அழைப்பாராயினர்.

அவர் செயலாற்றக் கருதுங்கால் மரஞ் செடி கொடி களிடைப் பிறர் மலைக்கத்தக்கவாறு நடந்துகொள்வார். ஒரு குழந்தையை நீராட்டிச் சீராட்டிப் பாலூட்டி வளர்ப் பது போலவே அவர் ஒவ்வொரு மலரையும் வளர்த்து வருவார். பெரியதொரு மரத்திலுள்ள ஒரு சிறு கிளை ஒடிந்திருக்கக் கண்டாலும் அவர் மனம் தீயிடைப்பட்ட மெழுகெனக் கரைந்துருகும்; இஃதிவ்வாறாக, யாராவது வேண்டுமென்றே நறுமலர்களை நலங்குலைக்கக் கண்டால் நெஞ்சு துடிதுடித்து அலறுவார் என்று கூறவும் வேண் டுமோ? மலர்கள் நோயுற்றிருக்கின்றன என்று அறிவா ராஞல் உடனே அந்நோய்க்கேற்ற மருந்தைத் தேடி யளித்து நோய் தீர்ப்பார்; அழகற்றிருக்கும் மலர்களுக்கு அழகூட்டுவார்; எல்லா மலர்களையுமே நறுமணங் கமழச் செய்வார்.

இளமையிலிருந்தே அவர் மரம் மட்டைகளுடன் உறவாடி வந்தார். இளமைப் பருவத்தில், அவர், அடக்கமுடியாத வருத்தமுற்று அழத்தொடங்குங் காலத்தில், அவருடைய தாயார் ஒரு மலரைப் பறித்து அவர் கையிற் கொடுத்து விடுவாராஞல், பர்பாங்க் தம்

* The Wizard of Plant Life.

அழகை மாறி அகக்களிப்பெய்துவார். பார்வைக்கு அழகற்றும், தொட்டால் வழு வழுப்பாக இல்லாமலு மிருக்கும் மலரினங்களெல்லாம் அவர் கை பட்டவுடன் பேரழகையும் பெருங் கவர்ச்சியையும் பெற்றன. தந்தை சொல்லைத் தட்டாமற் கீழ்ப்படிந்து நடக்கும் பிள்ளைகளை யொப்ப, மலரினங்கள் அவருடைய சொற்களுக்கு இரண் டில்லாமற் கீழ்ப்படிந்து நடந்தன. மக்களாய்ப் பிறந் தோரில் மலர்கள்மாட்டு அவரைவிட மிகுந்த உண்மை யன்பு பூண்ட மற்றொருவரில்லை; அவ்வாறே மலரினங் களால் அவரைவிட மிகுதியாகப் போற்றப்பட்ட மற் றொருவருமில்லை.

மலர்களை மட்டுமே யன்று; குழந்தைகளையும் தாய் நாட்டையும், மக்கட் குழுவையும் பர்பாங்க் மனமார நேசித்தார். அவருடைய வாழ்க்கையே இடையீடற்ற ஓர் அன்பு வாழ்க்கையாம். மணந்த மனைவியினிடமும், பயந்த மக்களிடமும் என்றென்றுங் காதலு மன்புங் குறையா தொழுகிவரும் ஒரு கணவனின் வாழ்க்கையை யொத்ததே அவர் வாழ்க்கை. காதல் நிறைந்து களி துளும்பும் ஒரு வாழ்க்கையின் பெருமைக்கு இணையு முண்டோ!

மலர்கள் தம் நறுமணத்தைக் கைம்மாறேதுங் கருதா மல் உலகினர்க் கீந்துவருதல்போல அவரும் தம் வேலை யைக் கைம்மாறு கருதாமலியற்றி உலகுக்கு நலத்தை வழங்கி வந்தார். தாமாற்றிய பணியால் உலகம் ஒளி யும் நலனும் அழகும் பெருகித் திகழக்கண்டார். அவர்

இந்நிலத்திடைப் பிறவி யெடுத்ததால் இந்நிலமே பெரு நலனுற்றுப் பெருமகிழ் வெய்திற்று என்றுகூறல் மிகை யாகாது. மகனாய்ப் பிறந்த எவனுக்கும் இதைவிடச் சிறந்ததொரு புகழுரை கூறமுடியுமோ? கடவுளே இத் தகைய ஒரு வெற்றித்திறனைக் கண்டு பெருமை கொள்ள மாட்டாரோ!

பர்பாங்கின் வேலையும் அதன் விளைவுகளும், அவர் தம் ஆராய்ச்சிகளும் மக்கட் டொகுதிக்கே எத்தகைய நன்மையை விளைத்திருக்கின்றன என்பதை இன்னும் பெருக்கிக் கூற இங்கு இடமில்லை.

அவர் வாழ்ந்த இத் தலைமுறையிலேயே அவராற் புதிதாக உண்டாக்கப்பட்ட பழங்கள், மலர்கள், காய் கறி வகைகள் முதலியவற்றால் விளைந்திருக்கும் பொது நலமும் பொது மகிழ்ச்சியும் அளவிட்டுரைக்கற்பாலன வல்ல.

யாரால் இத்தகைய பலன்கள் விளைந்தன என்பதை ஒருசிறிதும் உணராமலே கோடிக்கணக்கான மக்கள் அவருடைய வேலையின் பயனை நுகர்ந்து வருகின்றனர்.

அவர் தம்முடைய மரநூலாராய்ச்சியிற் கண்டுபிடித் துப் பயன்படுத்திய தேர்வு, மாற்று, குலம் என்ற மூன்று கோட்பாடுகளும் * அறிவியல் வளர்ச்சிக்குப் பெரிதும் துணைபுரிவனவா யிருக்கின்றன. அவர் செடிகளிடைக் கையாண்ட முறைகளை, மக்களிடைப் பின்பற்றின் எளி தில் வெற்றி பெறலாமன்றோ!

---

* Laws of Selection, Variation and Heredity.

பர்பாங்க் எடுத்த வேலை இன்னும் முற்றுப் பெற வில்லை; உண்மையாகப் பார்த்தால் அவ்வேலை இப்பொழுதுதான் தொடங்கப் பெற்றிருக்கிறது. அவர் இறந்தது அவர் மேற்கொண்ட பெரும்பணிக்கு இறுதியை அளித்து விட்டது; ஆனாலும் அத்துறையில் உழைக்கும் மற்றையோர்க்கு அவரிறப்புப் பெரும் பொறுப்பைச் சுமத்திவிட்டது. தனியராய் அவர் செய்த பெரிய வேலையை இப்பொழுது ஆயிரக்கணக்கான மக்கள் ஒன்றுகூடிச் செய்யவேண்டியதாக உள்ளது.

1849 மார்ச்சு ஏழாம்நாள் லூதர் பர்பாங்க் பிறந்தார். இருபத்தாறு ஆண்டுகள் கழிந்தபின் அவர் காலிஃ போர்னியாவிலுள்ள சாந்த ரோஸா என்னுஞ் சிற்றூரிற் குடியேறி அவ்வூருக்கு என்றும் மங்காப் பெரும் புகழை யளித்தார். அவ்வூரில் அவர் வைத்துப் பயிராக்கிய ஒரு மரத்தினடியிலேயே அவர் அடக்கஞ் செய்யப் பட்டுள்ளார். அவர் அவ்வூருக்கு முதன் முதல் வந்த போது பத்து டாலர் பணம், பத்து உருளைக்கிழங்கு, நாலைந்து நூல்கள் ஆகிய இவற்றுடனேயே வந்ததாகச் சொல்லப்படுகிறது.

அந்நூல்களின் ஆசிரியர்களில் மூவரே அவர் மேற்கொண்ட வாழ்க்கைத் தொண்டில் அவரை ஈடுபடுத்திய வர்கள். ஹென்ரி தாமஸ் தோரோ*, சார்லஸ் ராபர்ட் டார்வின் †, அலெக்ஸாண்டர் வான் ஹம்போல்ட் ‡ என்

---

* Henry Thomas Thoreau. † Charles Robert Darwin. ‡ Alexander Von Humboldt.

சாந்த ரோஸாதோட்டத்தில் அவர் வளர்த்த
இம்மரத்தடியிலேயே பர்பாங்க் இறந்தபின்
அடக்கஞ் செய்யப்பட்டார்.

பக்கம் எ௰

போரே அம்மூவராவர். அவர்களுள் டார்வினை மட்டும் பர்பாங்க் எப்பொழுதும் "தலைவர்" என்றே அழைக்க விரும்புவார்.

எடுத்த ஒன்றைத் தொடுத்து முடித்தல் வேண்டும் என்ற பேரவாவை பர்பாங்கின் உள்ளத்திடை எழுப்பியது இம் மூவர்களே. தன்னம்பிக்கையை விளக்கும் சிறந்த ஒப்பரிய இப்பண்பை ஒரு பேரறிஞரே மற்றொரு பேரறிஞருக்கு ஊட்டமுடியுமே யல்லாது மற்றையோரால் இயலாது; அன்றியும் உலகப் பெருவள்ளல்களாய்த் திகழ்ந்த ஒருசில வீரப் பெருமக்கட்கேயுரியதாயிருக்கவல்ல போற்றற்குரிய ஒரு பெருங்குறிக்கோளை இவர்க்கு வகுத்தளித்ததும் இம் மூவர்களே யாவர்.

ஆகவே, பர்பாங்கின் நினைவு மறவாதிருக்குமாறு இம்மரத்தை நடுகல்லாகக் கொண்டு நடுவதே ஏற்றதாகும். இம் மரம் வளர்ந்தோங்கிப் பரந்து தழைத்து "அறிவியற் கோலம்பஸ்" என மதிக்கக்கூடிய இப் பெரும் புகழாளருக்கு நிழல்புரிவதாக.

நல்ல கட்டமைந்த உடலைப் படைத்தவரல்லர் இப் பெரியார்; உடல் வலியிலும் மிக்கவரல்லர்; போதாக் குறைக்கு முற்றுப்பெறாக் காதலால் கவற்சி கொண்டு உள்ளம் நொந்து நைந்திருந்தவர். எனவே, தம்முடைய தோட்டத்தையே கவின்பெறு காதலியாகவும், அத் தோட்டத்திடை மலரும் நன்மலர்களையே செல்வச் சிறார்களாகவுங் கருதி, அன்பு பாராட்டி அவர், உடைந்த தம் உள்ளத்தை ஒருவாறு செம்மைப்படுத்த முயன்றார்.

அவருள்ளத்திடை அடைபட்டுக்கிடந்த காதல் வெள்ளம் எத்துணைத்து ! தம் மனைவியாகவும் மக்களாகவும் கருதி வந்த தோட்டம் மரஞ்செடி கொடிகளிடை எவ்வாறு அத் துணை வெள்ளத்தையும் மடைதிறந்து விட்டதுபோற் பாய்ச்சினர்! இவ்வாறு இயற்கையோடொட்டியே உயிர் வாழ்ந்தும், அன்னையாகிய நிலப்பெருந்தேவியின் ஆணை வழியொழுகியும் பர்பாங்க் மெலிந்த தம்முடலிற்கு உர மேற்றிக் கொண்டார்.

தாம் மேற்கொண்ட வேலையில் முழுதும் ஈடுபட்டவ ராய் அரைநூற்றுண்டளவு செல்வதாயிருந்த தம் பெரும்பணியை அவர் தொடங்கினர்.

சாந்த ரோஸாவிற்கு வந்தபோது பர்பாங்க் ஊர் பேர் தெரியாத ஒருவராகவே வந்தார். அப்படி யிருந் தும், பிற்காலத்தில் அவ்வூரிலுள்ள அவர் வீட்டு வாயிற் புறம் பெரியதொரு சாலையாகவே மாறிவிட்டதென்று கூறலாம்; உலகிற் சிறந்த அறிவாளிகளும் புகழாளர் களும் ஒண்புலமை வாய்ந்த இத்தோட்டத் தலைவரைத் திரள் திரளாகத் தேடிவந்து வணக்கஞ் செலுத்தினர்.

தாம் உழைத்த உழைப்பினுற் பிறர் அளப்பருஞ் செல்வத்தைப் பெறுமாறு செய்தார் இப்பெரியார். இதனுல், மாத்திரைக் கோலைச் சுழற்றி மாயவித்தை காட்டும் கருமாயக்காரர் பர்பாங்க் என்று கருதிவிடக் கூடாது. விடாமுயற்சியுடன் அரும்பாடுபட்டே செய் வன செய்தவர் அவர்; அவர் தொழிலில் அவருடன் போட்டியிட்டவர்கள் தொகை மிகப்பெரிய தொன்று

கும். புகழெனும் குன்றின் மேல் தங்க வசதியான இடமிருப்பினும், அவ்விடத்திற் கொண்டுய்க்கும் பாதையில் மொய்த்திருக்கும் ஆராய்ச்சியாளரின் பெருங்கூட்டத்தை இடித்துத் தள்ளிச் சென்றன்றோ பர்பாங்க் அவண் அடைதல் வேண்டும்!

தமக்கு முன்னரே மரநூற்றுறையிலும், தோட்டப பயிரிடுந்துறையிலும் இறங்கி மெச்சத்தக்கவாறு பணியாற்றி வந்தவர்கள் பலருளர் என்பதை பர்பாங்க் அறிந்திருந்தார்; ஆகவே, அவர்களும் மற்றையோரும் செய்திராத ஒன்றையே தாம் செய்து முடிக்கவேண்டுமென்று உறுதி பூண்டார். அவ்வுறுதி பூண்டு பணியாற்ற இறங்கிய துறையிலோ அவருக்கு நேரிட்ட இடையூறுகள் ஒன்றிரண்டல்ல; நூற்றுக் கணக்கானவைகள். ஆனல், அவ்விடையூறுகளெல்லாம் நீரில் அழுத்தக் கழுத்திற் கட்டப்படும் கருங்கற்களைப் போலல்லாமல், புகழ்க்குன்றிற் கேறும் பாதையில் தொலைகுறிக்க நாட்டப்பட்டுள்ள கற்களேயாயின.

ஒவ்வோரிடையூறும் ஒவ்வொரு வழியில் பர்பாங்கின் அறிவைப் பெருக்கவே துணைபுரிந்தது. ஆராய்ச்சியாலும், படிப்பினைகளாலும் அவர்தம் அறிவைப் பண்படுத்தி மேலுமேலும் பெருக்கிக் கொண்டார்.

உற்று நோக்கி உய்த்தறியும் உயர்ந்த பண்பை இணையற்ற அளவிற்கு அவர் படைத்திருந்தார்; இயற்கையன்னையின் நுட்பங்களைத் துருவி யுணரவேண்டி அவள் மாட்டு நிகழும் ஒவ்வொரு சிறு மாறுதலையும் விடாமல்

நோக்கி வந்தார். நம் அறிவைப் பெருக்கத் துணைபுரிவன வெல்லாம் பழக்கத்திற் றெரியும் படிப்பினைகளே யன்றோ? நாகதாளியில் அவர் செய்த ஆராய்ச்சியால் அறிவு எவ்வாறு வளர்ந்து சென்று இயற்கை யுணர் வாய் மாறுகிறது என்று கண்டார்.

எடிசனைப் போன்றே இவரும் "உழைப்பின் வாரா உறுதிக ளுளவோ!" என்று நம்பியவர். எச்செயலும் இவருக்கு அரிய செயலன்று. அதைச் செய்து முடிப்ப தில் எத்தகைய இடர்ப்பாடு நேரிடினும் இவர் அதனை ஒரு பொருட்படுத்த மாட்டார். தாம் செய்து முடிக்க வேண்டியவை இன்னின்ன என்று தெளிவாய் வகுத் துக்கொண்டு அவற்றைச் செய்து முடிப்பதிற் கண்ணுங் கருத்துமா யிருப்பார்.

வெளித் தோற்றத்தை மட்டும் நம்பி அவர் எப் பொழுதும் ஏமாறியதில்லை. மக்களின் வெளித்தோற்றம் போலவே மலர்களின் வெளித் தோற்றமும் பெரும் பாலும் ஏய்க்கும் பான்மைத்து என்றுணர்ந்தே அவர் தவறு கண்ட விடத்தெல்லாம் முற்ற முடிய ஆராய்ந்து குற்றங் களைந்துவந்தார்.

தன்னைச்சுற்றி யுண்டாகும் மாறுபாட்டிற் கேற்ற வாறு ஒருமலரின் தன்மையும் தவறாமல் மாறுபாடெய் தும்; ஆதலால், பல நாளாய்ப் படிந்துள்ள ஒரு குற் றத்தை அதன்கணின்றும் அகற்றுதற்கு அம்மலர்ச்செடி யின் வேர்களையே அறுத்து ஆற்றுவதும் இன்றியமை யாததாகும்.

இயற்கை யன்னையின் நுட்ப நுணுக்கங்களை அறிந்து கொள்ளும் வழியைக் கற்று, அவளுடன் பேசுவது எவ்வாறு என்று கற்றுக் கொண்டதுதான்; பர்பாங்க் அம்மொழியில் தேர்ச்சியுடன் விரைவிற் பேசி வருவாரானார். அவரை விடத் தங்களுடன் கிளர்ச்சி தரும் வகையிற் பேசக்கூடிய மற்றொருவரை மரஞ் செடி கொடிகள் கண்டில. பேசக்கற்றுக் கொண்டதும் இயற்கை யன்னையுடன் அவர்கொண்ட நட்பு என்றும் பிரியா நட்பாயிற்று. அவ்வன்னையின்பால் அவர் வைத்த பற்று என்றென்றுங் குறைந்திலது.

இயற்கை என்னும் ஆசிரியருக்கு ஏற்ற மாணவர் அவரே; இயற்கையின் மொழியை எழுத்தெண்ணிக் கற்று, இலக்கணமறிந்து வாழ்க்கை என்னும் பெருநூலில் அணிபெறப் பக்கம்பக்கமாக எழுதி நிறைத்த ஒரு சிலரில் பர்பாங்கும் ஒருவரானார்.

"இயற்கை யன்னையின் உள்ளத்தை யெடுத்து என்னுள்ளத்துடன் இணைத்தேன்; அதனால், பல நூற்றாண்டுகளாக உழைத்தாலன்றிப் பெறமுடியாத இனிமையையும் கவர்ச்சியையும் இயற்கைப் பொருள்கள் பெறுமாறு செய்தேன்" என்று ஒருமுறை பர்பாங்க் கூறினார்.

தாம் கருத்திற்கொண்ட குறிக்கோளை யெய்த, அழகு, ஆற்றல், இனிமை என்னும் மூன்று சிறந்த பண்புகளையும் ஒரே காலத்தில் தம் மனைவிகளாகக் கொண்டார் பர்பாங்க், என்று கூறலாம்.

இயற்கை யன்னைக்கே தெரியாத அழகுநிறைந்த

பாட்டைகள் வழியே அவ்வன்னையைக் கையைப் பிடித்து அவர் வலிய அழைத்துச் சென்றார். அவருடைய உதவியால் அவ்வன்னை தன்னுடைய ஆற்றலுக்கும் மீறின எழில் பெருகப் பெற்றவளாய் ஆரஅமர உட்கார்ந்து தன்னெழிலைத் தானே வியந்துகொள்பவளானாள்.

இவ்வாறு செய்துமுடிக்க பர்பாங்க் மாயமோ மந்திரமோ ஒன்றும் புரியவில்லை; கடவுளாற்றல் வாய்ந்தவர் என்று பகட்டிக் கொள்ளவுமில்லை; அன்றிக் கடவுள் உண்ணின்றுணர்த்தத் தாம் செயல் புரிந்ததாகப் பெருமை பாராட்டிக் கொள்ளவுமில்லை. அவர் செயல்களெல்லாம் அறிவியல் விந்தைகளேயன்றி மாயவித்தைகளல்ல.

தாம் அரிதிலறிந்த எல்லாவற்றையும் பர்பாங்க் கேட்பவர்க்கெல்லாம் உளமுவந்து பரிவுடன் கற்றுக் கொடுத்து வந்தார். அவர் ஓர் அறிவூதாரி.* "நான் கற்றுக்கொண்டதை நீங்களும் கற்றுக்கொள்ளலாம்" என்றே அவர் எப்பொழுதுங் கூறுவார்.

அவர் உயிரே ஓர் அறிவியல் வல்லுநரின் உள்ளம் என்று கூறலாம்.

அவர் பழக்கத்திற் கொண்டு வந்தனவும், ஒவ்வொருவரும் பழக்கத்திற் கொண்டு வரவேண்டுமென விரும்பியனவுமாகிய ஒப்பரிய பல உண்மைகளையும் அவர் எங்கே கற்றார்!

அவ்வுண்மைகளெல்லாம் மரஞ் செடி கொடிகளிடை வெற்றிபெற விளங்கியமை போல மக்கட்

---

* Intellectual spendthrift.

டொகுதியி னிடையிலும் வெற்றிபெற விளங்கும் என அவர் எவ்வாறு நம்பினர்!

அவர் பள்ளியிற்கற்ற கல்வியின் துணைகொண்டு மட்டும் இத்துணை வன்மையுடன் இயற்கை யுண்மைகளை அறிந்திருத்தல் முடியாது; அவர் கண்டுபிடித்த புதுமைகளைச்செய்ய இயல்வதற்கும் அவர் அத்துறையிற் பயின்ற தனிப்பட்ட கல்வியும் போதாது.

"ரெட் ஸ்கூல் ஹவுஸ்" என்னும் சிறு பள்ளிக்கூடத்தில் அவர் பயின்றவெல்லாம் அரிவரியும்,* எண்சுவடியுமே என்று கூறலாம்.

பின், அவர் இத்துணைத் திறமையுடன் செயல் புரிந்து அறிவு வளர்ச்சியைப் புலப்படுத்தியதுதான் எவ்வாறோ என்பது பின்வரும் அவர் கூற்றுனேயே விளங்கும். அவர் பயின்ற கல்வியை, அறிவை வளர்க்க உண்மையிலேயே விரும்பும் ஒவ்வொருவரும் எளிதிற் பெறக்கூடும்:

"நான் கல்வி பயின்றது இயற்கைக் கல்லூரியிலேயே யாகும். தோட்டப்பயிர் வளர்ப்பு முறையிலும், காய் கறி வகை வளர்ப்பிலும், சிறிது காலத்தில் தேர்வு பெற்றபின், இயல்பாகவே செடி கொடி வளர்ப்புமுறை கற்பிக்கும் ஆய்வுக்களத்துட் கொண்டுய்க்கப்பட்டேன். உய்க்கப்பட்டு இவ்வளவு ஆண்டுகளாகியும் நான் அத்துறையில் தேர்வு பெற்றதாக ஒப்புக்கொள்ளமாட்டேன்; கற்கவேண்டிய பகுதிகள் இன்னும் எத்தனையோ உள.

---

*Alphabets.

ஆயினும் இயற்கைக் கல்லூரியில் மாணவனாயிருந்த காலத்திலெல்லாம் பல துறைகளையும் ஆராய்வதால் என் அறிவை என்னாலியன்றவரையிற் பெருக்கிக் கொண்டுள்ளேன்; காற்பந்தடிக்கவும், சொற்பொழிவாற்றவும் வேண்டுமானால் நான் நன்கு பயிலவில்லை யென்பதை ஒப்புக்கொள்கிறேன். ஒவ்வொன்றையும் நான் முற்றக் கற்றுத் துறைபோகவில்லை யாயினும் ஒவ்வொன்றின் அடிப்படையான உண்மைகளையும், தலையாய உறுப்பிலக்கணங்களையும் நான் பயின்றுள்ளேன்."

இயற்கை என்னுங் கல்லூரியில் பர்பாங்க், மரஞ் செடி கொடிகளைப்பற்றி மட்டுமேயன்றி, மண், பாறை, மலைகள், ஆறுகள், பறவைகள், மீன்கள், குதிரைகள், மாடுகள், நாய்கள் முதலியவற்றைப்பற்றியும் மக்களைப் பற்றியும் கற்றற்பாலனவாயவற்றை இயன்றவரையிற் கற்றுள்ளார்.

"ஒருவகைச் சட்ட வரம்பிற் குட்பட்டுத்தான் உலகம் நடைபெறுகிறது" என்று ஹம்போல்ட் என்பார் கூறுவதை அவர் கேட்டுள்ளார்; அக்கூற்று முற்றிலும் உண்மையான தொன்றே என்பதை பர்பாங்க் இயற்கை என்னுங் கல்லூரியில் ஆராய்ந்தறிந்தார்.

தாம் பயின்று புகழ்பெற்ற அவ்வியற்கையின் கல்லூரியிற் பிறரும் பயின்று தேர்ச்சியுறல் வேண்டுமென்று விரும்பிய பர்பாங்க், அக்கல்லூரி பிற கல்லூரிகளைக் காட்டிலும் எவ்வாறு சிறந்தது என்பதைப் பின்வருமாறு எடுத்துரைத்துள்ளார்:—

"கற்று மேதாவியாகவேண்டும் என்னும் பேரவாவுடைய ஒரு மாணவன் இயற்கையின் கல்லூரியில் தன் வாழ்நாள் முழுதுமே மாணவனாக இருக்க இசைந்து அங்குக் கற்பிக்கப்படும் ஒவ்வொரு துறையிலும் பயின்று வரலாம்; அவன் கற்கும் ஒவ்வோருண்மையும், எடுக்கும் உழைப்பின் ஒவ்வொரு பகுதியும் அவன் அடுத்துக் கற்கவேண்டிய மற்றொரு துறைக்கு முற்றிலும் ஏற்றனவாகவே அமைந்திருக்கும். இதுவே என் அன்பிற்குரிய இயற்கையின் கல்லூரிக்கும், மக்களால் நிறுவப்படும் பிற கல்லூரிகட்குமுள்ள தலையாய வேறுபாடாகும்."

இத்துணைப் பெரும்புகழ் படைத்த தன் மாணவனைப் பற்றி அக்கல்லூரி பெருமை பாராட்டிக்கொள்ள எவ்வாற்றானும் உரியதாகும். அக்கல்லூரியின் வாயிலின் மேல் கீழ்வரும் பர்பாங்கின் கூற்றுக்கள் பொறித்தற்குரியனவாம் :—

"தானென்ற ஒன்றற்றதே இயற்கை. உலக வாழ்க்கை என்ற ஒரு விளைவைப் பயப்பதற்காக உலகிடை நடைபெறும் பல இயக்கங்களும், அவ்வுலகத்தை ஒரு கட்டினுள் ளமைக்கவும் வாழ்க்கை தொடர்ச்சியுள்ள தொன்றெனக் காட்டவும் உதவும் பல சட்டங்களும் கலந்த ஒரு கலவையே இயற்கையாம். எபிரேயர்* ஜெஹோவா † என்றழைப்பதும், இயற்கைப் பொருள் நூலார் ஆற்றலென்று துணிவதும் அதுவே;

---

*Hebrews. †Jehovah.

மின்னுற்றல்* என்பதும், எல்லாம் வல்ல பொருளென்பதும் அதுவே.''

தேர்ந்த ஓவியக்காரரொருவரை ஒரு பெண்மணி, அத்துணை நேர்த்தியாகச் சித்திரந் தீட்ட அவர் தம் வன்னங்களை என்ன விட்டுக் குழைத்துக் கொள்கிறார் என்று கேட்க, "என் மூளையை விட்டுக் குழைக்கிறேன், அம்மணி,'' என்று அவர் விடை யிறுத்தாராம். அவ்வோவியம்வல்லாரின் வன்னங்களுக்கும் அவர் மூளைக்கும் என்ன ஒற்றுமையிருந்ததோ, அதே ஒற்றுமை தான் மலர்களுக்கும் பர்பாங்கின் மூளைக்கு மிருந்தது.

தாம் தீட்டும் சித்திரத்தின் உருவை வன்னந் தோய்ந்த தூரியக்கோல்† கொண்டிழுக்கும் ஒரே இழுப்பினுல் ஓர் ஓவியக்காரர் அடியோடு மாற்றிவிடக்கூடும். அவ்வாறே பர்பாங்க் தம்முடைய சிறு தீண்டுதலால் ஒரு மலரின் இயற்கையமைப்பையும், தன்மையையும் அடியோடு மாற்றிவிடுவார். அவ்வளவிற்கு பர்பாங்க் மலர்களின் உயிர்நாடிகளை உணர்ந்திருந்தார்.

ஒப்பரிய இவ்வாற்றலைக் குறித்து அவர் தாமே கூறியது பின்வருமாறு :

"தேர்திறனுக்குரிய இயற்கையுணர்வு எனக்குக் கருவிலேயே அமைந்ததாகும். என்னுடன் பிறந்த அவ்வுணர்வை, அதன் போக்கோடியைந்து, ஏற்ற கல்வியினுலும் பயிற்சியினுலும் பண்படுத்திக்கொண்டு வருகிறேன். என் ஐம்புல அறிவு மிகவும் நுட்பம் வாய்ந்ததா

---

* Electricity. † Brush.

கும். அதனுலேயே வெளித்தோற்றத்திற்கு எத்தகைய மாறுபாடுமில்லாதது போலுள்ள எவையேனும் இரண்டு பொருள்களில் ஆற்றல் மிகுந்தது எது, குறைந்தது எது என்று தேர்ந்து கூறிவிடுவேன். மணத்தையறிவதிலோ, நான் மற்றெல்லோரைக் காட்டிலும் மிக நுட்பமான ஆற்றல் வாய்க்கப் பெற்றுள்ளேன்.''

பர்பாங்க் தம் உள்ளமோ உடலோ மூப்படைந்ததாக எண்ணியதில்லை. தவறென்று கண்ட ஒன்றைக் கண்ட அந்நொடியிலேயே விலக்கிவிடுவார்; உண்மையெனக்கண்ட ஒன்றைக் கண்ட அந்நொடியிலேயே ஏற்றுக் கொள்வார்.

இத்தகைய திருந்திய மனப்பான்மையே அறிவீட்டுதற்குத் தலையாய துணையாம். அதுவே, நுண்ணறிவின் முதற் பண்பாகும்.

பின்வரும் பர்பாங்கின் கூற்றுக்கள் முதுமொழிகளென வழங்கத் தக்கன :—

"பிறர்மதம் பொருமை பிடிவாதமாகும். மதச் செருக்கென்பது தன் மதத்தையும் மதாசாரியர்களையும் உயர்த்திக் கூறுதலாம். குறுகிய நோக்கமோ கற்கவும் விரும்பாக் கழிபேரறியாமையாம்.''

விவிலியநூல்* கடவுள் வாக்கு என்பதை அவர் ஒப்புக்கொண்டதில்லை. அது பின் வருங்கூற்ருல் நன்கு விளங்கும்.

"விவிலிய நூலைக் கடவுட்பற்றென்னுங் கண்கொண்டு

* Bible.

நோக்குதலாகாது. பிறநூல்களைப் பகுத்தறிவு கொண்டு கற்று அவற்றின் தராதரம் உணர்வதுபோலவே புறத்தே செவிடுபட ஒலிக்கும் குழறுபடைகளுக்குக் காதுகொடாமல் அகத்தேயெழும் அறிவுணர்ச்சி ஒன்றுக்குமட்டும் இடங்கொடுத்து அதையும் கற்றல் வேண்டும். நல்லது கெட்டதைப் பகுத்தறியும் ஆராய்ச்சியுணர்வு இயற்கையிலேயே நம்மிற் பெரும்பாலோர்க்கு அமைந்துள்ளது. நாம் அதைப் பயன்படுத்த வேண்டாவோ? குழவிகளைப் போன்று பிறரால் அறிவூட்டப்படுதல் ஏற்குமோ?''

மதக்கோட்பாடு என்றது கருதிமட்டும் எவ்வொன்றிற்கும் பர்பாங்க் தனிமதிப்புக் கொடுத்ததில்லை; ஐயப்படுவதெதுவாயினும் தீர ஆராயமல் விட்டதுமில்லை; மதத்தைப் பொறுத்தவரையில் இதுதான் உண்மை என்று தாமும் எதையுங் கட்டுரைத்துக் கூறியதுமில்லை.

"யாண்டு பலவாகியும் நரையிலனாக நான் இருந்து வருவதெவ்வாறோ, என்று மக்கள் வியக்கின்றனர். இப்பொழுது எனக்கு வயது எழுபத்தேழாயினும் ஒரு வேலியைத் தாண்டவோ, ஓட்டமாய் ஓடவோ, நான் பின்வாங்கமாட்டேன். அஃதேனெனில் 'என் உள்ளம் மூப்புறாமல் இளமையுடனேயே இருந்து வருகின்றது. என் உடலும் உள்ளத்திற்கேற்ப மூவாநலனுடன் இருந்து வருகிறது. மூப்பினால் என் உள்ளம் தளர்வடைந்த தென்பது இதுகாறு மில்லை; இனியும், எக்காலும் அவ்வாறு தளர்வடையா தென்றே உறுதியாக நம்புகிறேன். என் எட்டாவது ஆண்டில் நான் ஒவ்வொரு

பொருளின் நுட்பங்களையும் உணர எத்துணை ஆர்வங் கொண்டிருந்தேனே அத்துணை ஆர்வத்தை இப்போதுங் கொண்டிருக்கிறேன்" என்று ஒருமுறை பர்பாங்க்கூறினார்.

மூட நம்பிக்கைகள் மலிந்த சமயங்களிற் பற்றுண்டுழலுஞ் சிலரை, "அவற்றை விட்டொழியுங்கள்" என்று ஒருவர் அறிவு தெருட்டினால், "மற்றியாதோ நீர் ஒப்பிக் கூறும் உயர்ந்த சமயம்?" என்று அவர்கள் மறுத்து வினவக் கேட்டிருக்கலாம். அத்தகைய தொரு வினாவிற்கேற்ற ஆணித் தரமான விடையை பர்பாங்க் அளித்துள்ளார். பின்வரும் அவ்விடை ஊன்றிப் படித்து உளங்கொளற் குரியதாகும்:—

"இயற்கை யன்னையுடனும் மக்களுடனும் பழகி வருவதால் என்னிடம் கூடைக் கணக்காயிருந்த பிறர் மதம் பொறாமை, குறுகிய நோக்கம், கொண்டது விடாமை, பகட்டு, வீண் பெருமை முதலிய இழிபண்புகள் சிறிது சிறிதாக ஒழியக் கண்டுளேன். தோட்டத்திலுள்ள களைகளை எவ்வளவுக் கெவ்வளவு எடுக்கின்றோமோ அவ்வளவுக் கவ்வளவு மலர்ச் செடிகளை நட இடம் பெறுகிறோம். அதுபோலவே, என் உள்ளமாகிய தோட்டத்திலிருந்து தான் என்னும் முனைப்பும், தற்பெருமையும் ஆகிய களைகள் சிறிது சிறிதாகக் களையப்படும் போதெல்லாம் பரந்த நோக்கம் அல்லது அன்பு எனப்படும் செடியை நட்டு வளர்க்க இடம் பெற்று வந்துள்ளேன். அதனால், என் உள்ளம் மலர்ந்து மணங் கமழ்வதாயிற்று ; என் வேலையைச் செய்து முடிக்

கும் உளத்திட்பம் பெற்றவனும், அவ்வழி பிறருக்குப் பெரு நன்மை யளிக்குமாறு உழைக்கக் கூடியவனும் நான் மாறினேன். அவ்வாறின்றி, இயற்கைக்கு மாறான மூடநம்பிக்கைகளைப் பற்றிக்கொண்டிருப்பதால் உள்ளத் தளர்ச்சியும், முன்னேறுவதில் விரைவு நெகிழ்ச்சியுமே நேரிடுகின்றன என்பவற்றை இயற்கையன்னையிடம் கற்றறிந்தேன்''.

இத்தகைய கருத்துக்களை மிக்குடைய பர்பாங்க், இம் மண்ணுலகை நீத்துச் செல்லும் இறுதிக்காலம் தம்மைக் கிட்டி வருகின்ற தென்பதைக் கண்டபோது, "மருட் சமய குரவர்களைக் கண்டித்து, பொய்படு சிறு தெய்வங் களை உண்மைச் சான்றோர்கள் எதிர்த் தொழிக்குங் காலம் குறுகிவிட்டது'' என்று கூறி, அக்கூற்றுக் கேற்ப ஆண்மையுடன் வெளிப்படையாய்த் தாம், "ஓர் அஞ் ஞானியே,'' என்று பறையறைந்தார்.

அவ்வாறு அவர் அறைந்ததனால், மதக் கோணய்க ளெல்லாம் அவரை மல்லுக்கிழுத்துத் தசையைப் பிடுங் கத் தம் பற்களைத் தீட்டிக்கொண்டன; ஓயா வசைமாரி பொழிந்தும், ஒன்றை நூறாகப் புனைந்துரைத்தும், அவர் செய்த ஒப்பரிய பெருஞ் செயல்களை யெல்லாம் அவருடனேயே புதைத்துவிடவும் முயன்றன.

பறைசாற்றிய அவர், பிரான்க்லின்*, ஜெஃபர்ஸன்†, பெயின்‡, லின்கான்§, இங்கர்சால்|| முதலிய பேரறிஞர் கள் குழாத்தில் ஒருவரானார்.

---

* Franklin. † Jefferson. ‡ Paine. § Lincoln. || Ingersoll.

தம் காலத்திருந்த மதக்கோட்பாடுகளும், மதச் சடங்குகளும் மக்கள் அறிவையும் பண்பையும் நஞ்சூட்டிப் பாழாக்கி வந்தமையால், பர்பாங்க் அவற்றை நம்பிப் பின்பற்ற மறுத்தார். அவை அறிவுவளர்ச்சியை முடக்கி அல்வழியிற் செலுத்திவந்தன. எனவே, வாழ்க்கையில் நேரிடுஞ் சிக்கல்களை உண்மையிலாராய்ந்து அறுத்தெறிய வேண்டுமானால், ஒருவன் களைகளாகிய மதக் கோட்பாட்டையும், மதத்தையும் வேருடன் பிடுங்கியெறிய வேண்டுமென்றே அவர் நம்பினார்.

அதற்கேற்ப அவர் தாம் கொண்ட கருத்துக்களை வெளிப்படையாகப் பறையறைந்து தெரிவித்துங்கூட, அவர் எய்தியுள்ள ஒப்பிலாப் பெரும்புகழ் கருதி அவரை **"மெய்ஞ்ஞானி"** என்று கூறித் தம் கூட்டத்திற் சேர்த்துக் கொள்ளக் கிறித்து மதத்தினர் முயல்கின்றனர். இஃதென்ன பித்தலாட்டம்!

லூதர் பர்பாங்க் மதப்பற்றற்றவர்.

மதவெறி, மதச்செருக்கு, மதப்பகைமை, மதச் சழக்கு ஆகியவைகளை விளைக்கக்கூடிய பொருளற்ற மத முனைப்புக் கொண்ட ஒருவனது உளப் பான்மையுடன் அவர் உளப்பான்மையை ஒப்பிடக் கூடாது.

மதப்பற்றுடைய அன்பு இனப்பற்று விளைக்கும். கிறித்தவன் கிறித்தவன்மீதே அன்புகொள்வன். யூதனொருவன் யூதன்மீதே அன்பு கொள்வன்.

ஆனால், லூதர் பர்பாங்க் வேற்றுமை பாராட்டாமல் எல்லோர்மீதும் ஒருபடித்தான அன்பு பாராட்டி

வந்தார். "நான் ஒவ்வொன்றி னிடமும் அன்புவைத் திருக்கிறேன். மலர்களின்மீது அன்பு கொள்கிறேன்! குழந்தைகள்மீது அன்பு கொள்கிறேன்! என் நாயினிட மும் அன்பு கொள்கிறேன்," என்பது அவர் கூற்றே.

லூதர் பர்பாங்க் மதப்பற்றற்றவர்—மதப்பற்றுக் கொள்ள வியலாத அளவிற்குப் பிறர்மீது அன்புகொள் ளும் பண்புவாய்ந்தவர்.

அவர் பிறவுயிரைத் தம்முயிரென மதிக்கும் பெற் றியர்—மக்களினத்தின்மீது ஒருங்கே அன்புகனிந்தவர்.

"மதப்பற்றுடைய ஒருவன் தன் கடவுளின் மீது பேரன்பு கொள்கிறான். கடவுளை முழுமனதுடன் காத லிக்கும் அத்திறத்தால் பிறவுயிர்களின்மீது அன்பு காட்ட இயலாதவனாகிறான்."

"கடவுள் எல்லாம் வல்லவர்" என்று பெரும்படி யாகக் கூறிவிடுவதை பர்பாங்க ஒப்புக்கொள்ளாது வெறுத்தொதுக்கி வந்தார்.

"அன்பே வடிவாகிய ஒரு கடவுள் மக்களை எரி வாய் நரகத்திற் கிடத்துவார், என்று கூறுவது அறிவு சிறிதுமில்லா இழிகூற்றாகும்! அதை யொத்த கூற்றுக் கள் மூளைப் பிறழ்வின் ஊளையொலிகளே! மூட நம் பிக்கை வேரூன்றியதையே அவை குறிக்கும்! அத்தகைய ஒருகடவுளுடன் எத்தகைய தொடர்புங் கொள்ள நான் விரும்பமாட்டேன்."

என்பவற்றால் மேற்கூறிய பர்பாங்கின் அன் புடைமை இனிது விளங்கும்.

அவருடைய உண்மைக் கோட்பாடுதான் யாதோ, என விளக்கி எழுதியனுப்புமாறு விடுத்த கடிதமொன் றிற்குப் பின்வருமாறு பர்பாங் விடை எழுதியனுப்பினார்:-

"வாழ்க்கை யென்னும் சகடத்தி லுடனூர்ந்து வரு பவர்களுக்கு ஒருமையுடனுழைப்பதும், உண்மைக்கே பாடுபடுவதுமே குறிக்கோள்களாக உடைய ஒரு வனுக்கு அத்துணையே சாலும். அதை விடுத்துப் பழிவாங்கும் ஒரு தெய்வத்தினிடமோ, பேய்த்தன்மை படைத்த ஓர் அலகையினிடமோ, தீமிக்க நரகத்திலோ எனக்கு நம்பிக்கை யில்லை."

மதப் பற்றுடைய ஒருவன் கோயிலுக்குச் செல் கிறான்; விழா வெடுக்கிறான்; நோன்பு கிடக்கிறான்; மதத் தொடர்புடைய எல்லாச் சடங்குகளிலும் கலந்து கொள்கிறான். தன் பொருட்டுக் கடவுளைப் போற்று மாறு நடுநிற்போனாகிய ஒரு குருவிற்குப் பொருள் தருகிறான்.

"நற்பணியாற்றிக் கடவுளைப் போற்றினால் அப் போற்றுதல் உயர்வை யளிக்கக்கூடும்; உடலையும் உள் ளத்தையும் வருத்தி யுழைப்பவர்கள் கடவுட்பற்றுடைய வர்களாய், விரைவில் கடவுள் நல்வழி காட்டுவார் என்றே நம்புகின்றனர்" என்று பர்பாங்க் ஒரு முறை கூறி யுள்ளார்.

மெய்வருந்தி உழைக்காமல், நலம் வேண்டுமென்று கடவுளைப் பரவுதல் வாழ்விலேயே இழிவுமிக்க தன்னலங் கருதுந் தன்மையைக் குறிப்பதாகும்.

மதப்பற்றுடைய ஒருவன் மூளையை விற்று, அறிவை அடவுவைத்தவனாவான்; துறக்க நிரயங்களில் அவன் நம்பிக்கை கொள்கிறான்.

துறக்கம் புகவேண்டுமென்று பர்பாங்க் எப்பொழுதும் விரும்பியதில்லை, அத்தகைய ஒன்று இல்லையென்றுணர்ந்தாராதலின்; நிரயமென்பதற் கஞ்சியது மில்லை, அத்தகைய ஒன்றும் இல்லையென்றுணர்ந்தாராதலின்.

ஹூதர் பர்பாங்க் மதப்பற்றுடையவரல்லரே யல்லர். அவர் நல்லவர்; சிறந்தவர்; உலகிற் சிறந்தவரினுஞ் சிறந்தவர்.

மோசே*, இயேசு†, டார்க்கிமாடா‡, என்ற இவர்களெல்லாம் மதப்பற்றுடையவர்களே; ஜான் கால்வின்§, ஜான் நாக்ஸ்$, ஜான் வெஸ்லி||, மார்ட்டின் ஹூதர்°, காட்டன் மெஅதர்¶ என்போர் யாவரும் அத்தன்மையரே. போப்பும் அவ்வாறே.

ஹைப்பேஷ்யா**, புரூனோ††, கலீலியோ ‡‡ என்ற இவர்களெல்லாம் மதப்பற்றில்லாதவர்களே — அஞ்ஞானிகளே. எர்னேஸ்ட் ஹேக்கல்§§, ஹெர்பர்ட் ஸ்பென்ஸர்$$, சார்லஸ். பி. ஸ்டீன்மெட்ஸ்||||, வால்டேர்°°,

---

* Moses. † Jesus. ‡ Torquemada. § John Calvin. $ John Knox. || John Wesley. ° Martin Luther. ¶ Cotton Mather. ** Hypatia. †† Bruno. ‡‡ Galileo. §§ Ernest Haeckel. $$ Herbert Spencer. |||| Charles P. Steinmetz. °° Voltaire.

தாமஸ் பேயின்*, ஜான் பர்ரோஸ்†, மார்க் டுவைன்‡, என்போர் யாவரும் அத்தன்மையரே. கிளாரேன்ஸ் டாரோ§, என்பவரும் ஓர் அஞ்ஞானியரே.

லூதர் பர்பாங்க் இறந்து விட்டார்.

அவர் என்ன கொள்கை கொண்டிருந்தாரோ, அதே கொள்கையுடையவராயே இறுதிவரை யிருந்து உயிர் துறந்தார்.

அவர் இறந்துவிட்டார்; நம் உள்ளத்திடைத் ததும்பி நிற்கும் அன்பு வெள்ளத்தி னறிகுறியாக நாம் அவருடைய நினைவுவிழாக் கொண்டாட நாடுகிறோம்.

ஒரு பெரிய போர்வீரரையோ, அரசியல் வல்லாரையோ கொண்டாட நாம் கூடவில்லை. போரில் வெற்றி கொண்டவரிறந்தால் முழங்கும் சங்குபோல் எச்சங்கும் அவருக்காக முழங்கப் போவதில்லை. எளிமை வாய்ந்த, அன்பிற்குரிய, ஆண்மகனொரொருவரையே நாம் கொண்டாடாநிற்கின்றோம்.

உயிர்களை யோம்பியவர்; பொதுநலம் வளர்த்தவர்; மகிழ்ச்சியை ஊட்டியவர்; களிப்பை யளித்தவர். கள்ளங் கபடற்ற கரவிலா உள்ளத்தவர். தம்முடைய தவறொன்றினாற் பிறனொருவன் துயறுருதலை விரும்பாதவர்; $ அல்லிடத் தருள்சுரத்தல் தவறெனத் தெரிந்தும் அதுவே மேலெனக் கருதியவர்.

---

* Thomas Paine. † John Burroughs. ‡ Mark Twain.
§ Clarence Darrow.
$ அருள்சுரத்தற் குறித்தாகா இடம்.

லூதர் பர்பாங்குடன் நட்புப் பூணக் கொடுத்து வைத்தவர்கள் ஒரு நண்பரை இழந்தார்கள்; நம் நாடோ, புகழை மிகுத்துத் தன் பெயருக்கே ஒளியை ஈந்த ஒரு நன்மகனாரை இழந்தது.

உலகம் மாபெரும் வள்ளல்களில் ஒருவரை இழந்தது.

ஆயினும் மலரின் நடுவிலும், உலகிலுள்ள எழிலும் இனிமையும்வாய்ந்த எல்லாவற்றினூடும் லூதர் பர்பாங்க் தம் புகழுடம்புடன் வாழ்ந்துவருகிறார்.

அழியாப்புகழெனும் வானில் புதியதொரு விண்மீன் தோற்றமுற்று மிளிர்கின்றது—அம்மீனிடைக் காணப் படுபவரே அமெரிக்க நாட்டின் திருமகனார்; பெருமை சான்ற நன்மகனார்; அறிவியலறிஞர்; இயற்கை நூல் வல்லார்; அன்புருவினர்; அஞ்ஞானியர்—லூதர் பர்பாங்க்.

3187

முற்றிற்று.

3167

LUTHER BURBANK

Published by

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA
WORKS PUBLISHING SOCIETY,
TINNEVELLY, LTD.

Head Office:
EAST CAR STREET,
TINNEVELLY.

Branch Office:
6, CORAL MERCHANT ST.,
MADRAS.

PRICE AS. 14

Written by
Mr. Kazhi Siva Kannuswami Pillai